# விநோதமானவன்

நாம் சற்று நேரம் நின்றவண்ணமாக இருப்போமாக. விலையேறப்பெற்ற கர்த்தாவே, ஜெபத்தின் மூலம் நாங்கள் மறுபடியும் உம்முடைய தெய்வீக பிரசன்னத்தில் வந்து, எங்களுக்காக நீர் செய்திருக்கிற எல்லாவற்றிற்காகவும், எங்கள் இருதயத்தில் உமக்காகவும், உமது வார்த்தைக்காகவும் நாங்கள் கொண்டுள்ள பெரிதான அன்பிற்காகவும் முதலாவதாக உமக்கு நன்றி செலுத்துகிறோம். கர்த்தாவே, என் முழு இருதயத்தோடு நான் நேசிக்கும் இந்த ஜனங்கள் இன்றிரவு, உம்முடைய வார்த்தையை நேசிக்கின்றபடியால், அவர்கள் வந்து இந்த உஷ்ணமான அறையில் உட்காரும்படியான தியாகம் செய்துள்ளனர்.

2 கர்த்தாவே, வியாதியஸ்தருக்காகவும், தேவையுள்ளோருக்காகவும் ஜெபிக்க இன்றிரவு நாங்கள் வந்திருக்கிறோம். இந்த ஆராதனையின் முடிவில் பலவீனமுள்ளவர் ஒருவரும் எங்கள் மத்தியில் இல்லாதிருப்பார்களாக. கர்த்தாவே, அவர்களுடைய விசுவாசத்துக் கேற்ற பலனை அவர்களுக்கு அளிப்பீராக. கர்த்தாவே, உம்முடைய வார்த்தையின் மூலம் எங்களிடம் பேசி, நாங்கள் நிந்தையைச் சுமந்து செல்வதற்கென்று எங்களை பலப்படுத்துவீராக. இதைச் செய்வது என்ன ஒரு சிலாக்கியம்! நாங்கள் இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம். ஆமென். அமரலாம்.

3 இந்தக் கட்டிடத்தில் வந்து அமர்ந்துள்ள இப்படிப்பட்ட ஒரு கூட்ட ஜனங்களுக்கு என் நன்றியை வெளிப்படுத்திக் கூற நிச்சயமாகவே என்னால் வார்த்தைகளை கண்டறிய முடியவில்லை. நான் கூற விரும்புவது, அதாவது, நாளை…அடுத்த கூட்டத்திற்காக நாங்கள் கான்சாஸ் பட்டினத்திலுள்ள டோபிகாவுக்கு செல்லவிருக்கிறோம். அந்த கூட்டம் வருகின்ற ஞாயிறன்று முடிவு பெறும். அதன் பிறகு நாங்கள் அங்கிருந்து பிலதெல்பியாவுக்கு செல்கிறோம்.

இப்பொழுது, நாங்கள் வெளி நாடுகளுக்கு-கென்யா, டாங்கனியா மற்றும் உகாண்டாவில் உள்ள பழங்குடியினர்களிடத்திற்கு போக உத்தேசித்துள்ளோம். அங்குள்ள மாவு மாஸ் என்னும் பழங்குடியினரால் ஒரு சிறு கிளர்ச்சி இப்பொழுது அவர்களுக்கு உண்டாகியுள்ளது. ஒரு மிஷனரி என்னும் முறையில் அங்கு நான் செல்ல முடியாது, ஆனால் ஒரு வேட்டைக்காரன் என்னும் முறையில் அங்கு செல்ல நான் முயற்சி செய்யப் போகிறேன். உள்ளே செல்ல, அவர்கள் ஒழுங்கு செய்து வருகின்றனர்.

4 வழக்கமாக நான் மிஷனரி என்னும் முறையில் உள்ளே சென்று வேட்டைக்குச் செல்வதுண்டு. ஆனால் இம்முறை நான் வேட்டைக்காக உள்ளே சென்று ஒரு மிஷனரியாயிருப்பேன். எனவே அங்கே—அங்கே, எந்த வழியிலாவது அவர்களிடம் செல்ல வேண்டும். சகோதரர் மாட்சன்—போஸ் என்னை உள்ளே கொண்டு வர முயற்சிக்கும் பணியில் ஈடுபட்டு, வேட்டைக்கு செல்லும்படி உள்ளே நான் செல்ல ஒரு வேட்டைப் பயண திட்டத்தை ஆயத்தப்படுத்தப் போகிறார். பாருங்கள், ஆகையால் நான் இந்த பயணத்தின் பேரில் அங்கு செல்வேன். அப்பொழுது அவர் தூதரகத்துக்கு சென்று, "நம்முடைய சகோதரன் பிரான்ஹாம் இப்பொழுது இந்த தேசத்தில் இருக்கிறபடியால், இங்கு நாங்கள் ஒரு சிறு கூட்டம் நடத்தினால் பரவாயில்லையா?" என்று கேட்கப்போகிறார். புரிகிறதா? அது கூட்டங்களை தொடர்ச்சியாக அப்பொழுது துவக்குவதாயிருக்கும். எனவே நாங்கள் அவ்வாறு அதை செய்யமுடியுமா அல்லது இல்லையா என்பதும் எங்களுக்குத் தெரியாது. அவ்வாறு இருக்க நாங்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். அவரால் அனுமதி பெற முடியாமற்போனால், அப்பொழுது நான் கர்த்தரிடத்தில் கேட்டுள்ளதோ, அப்பொழுது நான் திரும்ப ஜெபர்ஸன்வில்லுக்கு ஜூலை அல்லது ஆகஸ்டு மாதத்தில் திரும்பி வந்து *ஏழு எக்காளங்களின்* பேரில், அங்கு எங்கோ பிரசங்கம் செய்ய அது ஒரு அடையாளமாக இருக்கும் என்பதேயாகும்,

5 அப்படி என்னால் செய்யக் கூடுமானால், நாங்கள் இன்றைக்கு காண்கிற, அதாவது நாங்கள் இங்கு குளிர் சாதன வசதி செய்யப்பட்டுள்ள இந்த பள்ளிக்கூட அறையைப் பெற முயற்சிக்கப் போகிறோம். ஏனெனில் அது உண்மையிலேயே நன்றாகவும் குளுமையாகவும் இருக்கும். அது ஆயிரத்தைந்நூறு, ஆயிரத்தெண்ணூறு இருக்கைகளைக் கொண்டது. அது குளிர்சாதன வசதி செய்யப்பட்டதாயுள்ளது. ஒரு புத்தம் புதிய இடம், கிட்டத்தட்ட இதைவிட ஐந்து சதுர அளவு பெரியதாகும். ஒரு முறை நாங்கள் அதை கேட்டபோது, அவர்கள் அதை நாங்கள் எடுக்க மறுத்து விட்டனர். நமக்கு அதை கொடுக்க மறுத்த அந்த மனிதன் நிர்வாகக் குழுவிலிருந்து நீக்கப்பட்டுவிட்டார். எனவே இப்பொழுதுள்ள மனிதனோ, நமக்கு அது தேவைப்படுகிற எந்த நேரத்திலும் பெற்றுக் கொள்ளலாம் என்கிறார். எனவே அதைப் பெற்றுக் கொள்ள நாங்கள்—நாங்கள் மிக்க மகிழ்ச்சியுள்ளவர்களாய் இருக்கிறோம். இப்பொழுது அதை நாம் எடுத்துக்கொள்ளலாம். ஜூலை மாதத்தில் எப்பொழுதாவது…இப்பொழுது கர்த்தருடைய சித்தத்துக்காக எத்தனை பேர் ஜெபித்துக் கொண்டிருப்பீர்கள்… எங்களுக்கு அனுமதி அளிக்கப்படாவிட்டால்…[சபையோர், "ஆமென்" என்கின்றனர்.—ஆசி.]

6 எனக்கு அரிசோனா பிடிக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அது அற்புதமான ஒரு பிரதேசம். அங்கு தங்க நான் எப்பொழுதும் விரும்பியதுண்டு.

சகோதரன் பென், நீங்கள் அதை சற்று மேலே தள்ளினால், நீங்கள் அவ்வாறு செய்தால், அது...ஓ, அது...ஆம் ஐயா, ஆம். அங்குள்ள யாராகிலும் ஒலியைச் சற்று அதிகமாக்குங்கள், ஏனெனில் நான் அங்கே அப்படிப்பட்ட நிலையிலிருந்து வரும்போது...[யாரோ ஒருவர், “ஒலிபதிவு செய்யும் சகோதரர்கள்” என்கிறார்.—ஆசி.] என்ன சொல்லுகிறீர்கள்? [“அது ஒலிநாடாக்களுக்கானதாய் உள்ளது.”] ஓ, அது ஒலிநாடாக்களுக்குரியது. ஓ, மற்ற ஒன்று இங்கு மேலே உள்ளது. நான் வருந்துகிறேன். சரி, சகோதரர் பென். எனவே நான்...

7 அரிசோனாவிலிருந்து வருகையில், இங்கு வருகையில் சீதோஷ்ண நிலையில் மாறுதல் உள்ள காரணத்தால் என் தொண்டை சிறிது கரகரப்பாகிவிடுகிறது. இங்கு நமக்கு ஈரத்தன்மை கிட்டத்தட்ட எண்பத்தேழு முதல் தொண்ணூறு வரைக்கும், சில நேரங்களில் நூறு சதவிகிதத்தையும் எட்டி விடுகிறது. ஆனால் அங்கு ஈரத்தன்மை பூஜ்யம். சில சமயங்களில் சராசரி ஒரு சதவிகிதத்தில் இருபதில் ஒரு பாகமாயுள்ளது. நீங்கள் பிராணவாயு கூடாரத்தில் தங்கியிருப்பதுபோல் இருக்கிறீர்கள். அங்கிருந்து நீங்கள் இங்கு வரும்போது, அது எப்படிப்பட்ட வித்தியாசத்தை உங்களில் உண்டாக்கி விடுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே அது உங்கள் குரலை தொல்லைப்படுத்தி விடுகிறது...

சகோதரன் பென் அதை முன்பிருந்த இடத்துக்கே நீங்கள் விரும்பினால் இழுத்து விடுங்கள். நான் தூரத் தள்ளினதினால் தவறு செய்து விட்டேன். நான் அங்கு இருந்தது என்று நினைத்தேன்... ஆனால் *இங்குதான்* அவர்கள் ஒலியைப் பெருக்குகின்றனர்.

8 நீங்கள் ஒவ்வொருவரும் எங்களுக்காக ஜெபியுங்கள். உங்களை நான் நிச்சயம் மெச்சுகிறேன். யாரோ ஒருவர் ஒரு கூடை பீச் பழங்களைக் கொண்டு வந்து எங்களுக்குக் கொடுத்ததாக பில்லி என்னிடம் கூறிக்கொண்டிருந்தான். நீங்கள் அளிக்கும் சிறு வெகுமதிகள்...போதுமான அளவுக்கு உங்களுக்கு என் நன்றியைத் தெரிவிக்க இயலாது. அதை எப்படி செய்வதென்று எனக்குத்—எனக்குத் தெரியவில்லை. அப்படிப்பட்ட வெகுமதிகளை உங்களிடமிருந்து பெற்றுக் கொள்ள நான்—நான் மிகவும் தகுதியற்றவன் என்று உணருகிறேன். தேவன் உங்களை ஆசீர்வதிக்கும்படி நான் ஜெபிக்கிறேன். அவர் ஆசீர்வதிப்பாரென்று நானறிவேன். ஏனெனில் அவர், “மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவருக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்” என்று கூறியுள்ளார். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாரென்று நான் நிச்சயமுடையவனாயிருக்கிறேன்.

9 அரிசோனா அப்பேர்ப்பட்ட ஒரு அருமையான பிரதேசம்; ஆனால் ஒன்றை மாத்திரம் அங்கு நான் இழந்தவனாயிருக்கிறேன்,

அது உங்கள் எல்லோரையுமே. அது உண்மை! நான் உங்கள் எல்லோரையும் காணமுடியாமல் தவிக்கிறேன். நான்—நான் எங்கு சென்றபோதிலும், உங்களைப் போன்றவர்கள் எனக்கு—எனக்கு கிடைக்காது. எனக்கு உலகம் முழுவதிலும் நண்பர்கள் உள்ளனர், ஆனால் உங்களைப் போன்றவர்கள் எனக்கு கிடைப்பது அரிது. இந்த சிறு கூட்ட ஜனங்களிடம் விசேஷமான ஒன்றுண்டு…என்னவென்று எனக்குத் தெரியவில்லை. நான் எப்பொழுதுமே உங்களைக் குறித்து நினைக்கிறேன்.

10 டூசான், அது சுற்றுலாவினரின் பட்டிணம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அங்கு சபைகள் ஒன்றுக்கொன்று தங்கள் பக்கம் இழுத்துக் கொள்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். அது ஒருவிதமான கடினமாயுள்ளது. அவை மிகவும் ஆவிக்குரியதாய் இல்லை; ஏனெனில் அவர்களிடையே போட்டி மிகவும் பலமாயுள்ளது. அது ஒருவித கடினமாயுள்ளது. நான் உங்களெல்லாரையும் மற்றும் சபையையும் பெற்று அங்கு வாழ முடிந்தால் நலமாயிருக்கும் என்று நான் யூகிக்கிறேன். புரிகின்றதா? ஆனால் இங்கு ஒரு சபையாக நீங்கள் எல்லாரும் இந்த சபைக்கு வந்து கொண்டிருப்பீர்களானால், இயேசு வரும் வரைக்கும் இது இங்கு நிலைத்திருக்கும் என்று நான் எண்ணுகிறேன்.

11 நான் சற்று முன்பு கூறினதுபோல, எனக்காக ஜெபியுங்கள். நான் அதைத் திரும்பத் திரும்ப கூற விரும்பவில்லை. ஆனால் உங்கள் முன்னிலையில் நான் வரும்போது, எனக்கு—எனக்கு பயம் ஏற்படுகிறது. நான் துக்கமடைந்து, உணர்ச்சிவசப்பட்டு, எளிதில் கோபமடைந்துவிடுகிறேன். நான் ஏற்கனவே அப்படிப்பட்டவன். எனவே நான்…அது என் உள்ளத்திற்கு மிகுந்த வேதனையை அளிக்கிறது. ஆனால் நான் எங்கு சென்ற போதிலும்… என்னுடன் இணைந்திருக்கும் இந்த குழுவைப் போல் வேறெந்த குழுவும் இல்லை என்பதை நான் அறிவேன். தேவன் நம்மை இணைபிரியாதவர்களாக்கி, வரப்போகும் ராஜ்யத்திலும் நாம் இணைபிரியாதவர்களாகவேயிருக்கும்படி அருளுவாராக என்பதே என் ஜெபமாயுள்ளது.

12 வேறு அறையில் ஒருவரைக் கிறிஸ்துவிடம் வழி நடத்துவதற்கு சற்றுமுன்பு, நான் கதவண்டையில் அமர்ந்து பில் டௌவிடம் பேசிக் கொண்டிருந்தேன். ஆனால் அங்கு அமர்ந்து அவரிடம் பேசிக்கொண்டிருந்தேன், அவருக்கு தொண்ணூற்றொரு வயது. அவர், "நான்—நான் பலவீனமடைந்து வருகிறேன். என் கண்களுக்கு முன்புபோல் பார்வை இல்லை" என்றார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு அவருக்கு மாரடைப்பும், இருதயத்தில் இரத்த ஓட்டத்தடையும் ஏற்பட்டு அவர் மரணத்தருவாயிலிருந்தபோது நான் அவரிடம் சென்றேன். அவருக்கு சிகிச்சையளித்து, அவர் குணமாக முடியாது என்று கூறின மருத்துவர் இப்பொழுது மரித்து விட்டார். ஆனால்

தொண்ணூற்றொரு வயதான பில் டெள இங்கு உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பாருங்கள். நான் அவரிடம், “பில், பணி செய்வதை பொறுத்தவரையில், உம்மால் இவ்வுலகில் உபயோகமாயிருக்க முடியாது. ஆனால் ‘தேவன் உமக்கு பலத்தை அளிப்பாராக’ என்று நான் அவரிடம் வேண்டிக் கொண்டிருக்கிறேன், ஏனெனில் உமக்கு இந்த கூட்டங்கள் மிகவும் பிரியம்” என்றேன். தொண்ணூற்றொரு வயதான இவர் உஷ்ணம், உலர்ந்த நிலை, குளிர்ந்த நிலை, சிரமம் எதையுமே பொருட்படுத்தாமல், மோட்டார் வாகனத்தில் நாடு கடந்து, தேவனுடைய வார்த்தையைக் கேட்க வருகிறார். தேவன் அந்த தீரமான ஆத்துமாவை ஆசீர்வதிப்பாராக. இப்பொழுது நான்...

13 இன்று காலை உங்களை மூன்று மணி நேரம் பிடித்து வைத்திருந்ததற்காக நான் இன்னும் ஒரு மன்னிப்பைக் கேட்க விரும்புகிறேன். நான் செய்திக்கு முழு நியாயத்தையும் செய்யவில்லை, ஏனெனில் அதை சுருக்கி, அதில் சில பாகங்களை கூறாமலே விட்டு விட்டேன். அந்த காரணத்தினால்தான் அந்த ஒலிப்பதிவை வெளியிட வேண்டாமென்று நான் அவர்களிடம் கூறினேன். வேறெங்காவது அதை நான் குளிர்ச்சியாகவோ அல்லது வேறெவிதமாகவாவது மறுபடியும் பிரசங்கிப்பேன். என்னால்—என்னால்—என்னால் பரிசுத்த ஆவியின் பிரசன்னத்தை உணர முடிந்தது. ஆனால் உங்களுக்கு உஷ்ணமாயிருந்ததையும், நீங்கள் காற்று வீசிக் கொண்டிருந்ததையும் நான் கண்டபோது, எனக்கு வருத்தம் உண்டானது. உங்களைக் கஷ்டப்படுத்த எனக்குப் பிரியமில்லை. நீங்கள் சௌகரியமாயிருக்கவே நான்—நான் விரும்புகிறேன். பாருங்கள்? அது என்னை கவலைக்குள்ளாக்கியது.

14 நான் வியாதியஸ்தரைக் காணுவது போல்; அந்த வியாதியஸ்தர் மேல் எனக்கு பரிதாபம் தோன்றாவிட்டால், அவர்களுக்கு நான் எந்த நன்மையும் செய்ய முடியாது. அவர்களுக்காக நான்—நான் அவர்களுக்காக பரிதபிக்க வேண்டும். அதே போன்றுதான் உங்களோடும், உங்கள் பேரிலும் நான்—நான் பரிதாபம் கொள்ள வேண்டும், இல்லையென்றால் நான் உங்கள் சகோதரனாயிருக்க முடியாது. புரிகிறதா? உங்கள் மேல் நான்—நான் பரிதாபங் கொள்ள வேண்டும். அப்படி நான் செய்கிறேன். அது உண்மையென்பதை தேவன் அறிவார்.

15 இன்றிரவு இப்பொழுது நான் வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கப் போகிறேன்.

நான் விரும்புவதோ...இந்த மனிதராகிய, சகோதரன் காலின்ஸ், ஹிக்கர்ஸன், சகோதரன் நெவில், சகோதரன் காப்ஸ், தர்மகர்த்தாக்கள் மற்றுமுள்ள இந்த மனிதர் யாவரையும் ஆசீர்வதியும். இந்த சபை எவ்வளவு ஒழுங்காகவும், எல்லாமே சரியான ஸ்தானத்தில் பொருத்தப்பட்டுள்ளது என்று எனக்கு வந்து கொண்டிருக்கிற அருமையான அறிக்கைகளுக்காகவும் ஆசீர்வதியும். நான்

புருஷர்களாகிய உங்களுக்கு நன்றியுள்ளவனாயிருக்கிறேன். ஒழுங்கை கடைபிடிக்க முயற்சிப்பதற்காக கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. டூசானில் எனக்கு கடிதத்தின் மேல் கடிதம் வருகிறதில், "சகோதரன் பிரான்ஹாமே, அது முன்பு போல் இல்லை. இப்பொழுது மிகவும் வித்தியாசமாயுள்ளது. தேவனுடைய பிரசன்னத்தில் ஆசீர்வாதமான உணர்வு அங்குள்ளது" என்று உள்ளது. அதற்காக நான்—நான் நன்றியுள்ளவனாயிருக்கிறேன், கர்த்தர் உங்களை என்றென்றைக்கும் ஆசீர்வதிப்பாராக!

16 இன்றிரவு இப்பொழுது நான் வேதாகமத்தில் படிக்கும் ஒரு சிறு பாகத்திலிருந்து சில வார்த்தைகள் பேசி; ஓரிரண்டு வேத பாகங்களை வாசித்து உங்களிடம் சில நிமிடங்கள் பேசிவிட்டு, அதன் பிறகு வியாதியஸ்தருக்கு ஜெபிக்கலாம் என்றிருக்கிறேன். சில நிமிடங்கள் மாத்திரமே. நான் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறேன். நான் கூடிய வரையில், வேகமாக முடிக்க முயற்சிப்பேன். ஜனங்கள் ஒன்று கூடியிருக்கையில், வார்த்தையைப் படிக்காவிடில், அல்லது ஏதாவது ஒரு காரியத்தை போதிக்காவிடில் கூட்டம் முழுமையடையாது என்றே நான் கருதுகிறேன்.

17 உங்களில் அநேகர் காத்திருக்கிறீர்கள். உங்களில் அநேகர் இன்றிரவு பல மைல்கள் பிரயாணம் செய்ய வேண்டும். அதை நான் எவ்வளவாக பாராட்டுகிறேன்! உங்கள் ஒவ்வொருவரையும் நான் காணும்போது எப்படியாய்...நான் அரிசோனாவில் இருக்கும் போது, "அவரை நான் மறுபடியும் காணும்போது அவரிடம் நடந்து சென்று, அவருடன் கைகுலுக்கி, அவருடைய கழுத்தை கட்டித் தழுவுவேன்" என்று நினைப்பதுண்டு. இங்கு நீங்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். நான் வேறு யாரிடம், வேறெங்கு செல்ல முடியும் என்பதை நீங்கள் அறிவீர்களல்லவா? யாரிடம் முதலில் தொடங்குவது என்றும், எப்படி முடிப்பதென்றும் எனக்குத் தெரியவில்லை. ஆனால் அதே சமயத்தில் நான் உங்களை நேசிக்கிறேன். தேவனும் கூட உங்களை நேசிக்கிறார்.

18 நான் தவறாக நினைத்துவிடாமலிருந்தால், நான் தவறான வேதவாக்கியத்தை இங்கு எழுதிவைக்கவில்லை என்றால், ஒரு பாடப் பொருளுக்காக நான் 1 கொரிந்தியர் முதலாம் அதிகாரம் 18-ம் வசனம் தொடங்கியும், 2 கொரிந்தியர் 12-ம் அதிகாரம் 11-ம் வசனத்தையும் வாசிக்க விரும்புகிறேன். இப்பொழுது என்னால் அதை சரியாக உடனடியாக கண்டறிய முடிந்து, நாம் அதை படித்து, பின்னர் ஜெபித்து உடனடியாக ஒரு சிறு பொருளின் பேரில் சில நிமிடங்கள் பேசலாம். I கொரிந்தியர் முதலாம் அதிகாரம், 18-ம் வசனம் முதல்:

> *சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது.*

*அந்தப்படி; ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன் என்று எழுதியிருக்கிறது.*

*ஞானி எங்கே? வேதபாரகரன் எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்கசாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தைத் தேவன் பைத்தியமாக்கவில்லையா?*

நான் மறுபடியும் அதை படிக்கட்டுமா? "இவ்வுலகத்தின் ஞானத்தைத் தேவன் பைத்தியமாக்கவில்லையா?" அப்படியானால் இவ்வுலகத்தின் ஞானம் என்ன? பைத்தியம்.

*இவ்வுலகத்தின் ஞானத்தைத் தேவன் பைத்தியமாக்கவில்லையா?*

*எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில் பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று.*

நான் மறுபடியும் அந்த வசனத்தைப் படிக்கலாமா? கூர்ந்து கவனியுங்கள்.

*எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று.*

*யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்.*

*நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்.*

*ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார்.*

*இந்தப்படி, தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது; தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது.*

19 II கொரிந்தியர் 12-ம் அதிகாரம் 11-ம் வசனத்தில் பவுல் இவ்வாறு கூறுகிறார்.

*மேன்மைபாராட்டி, புத்தியீனனாயினேன்; நீங்களே இதற்கு என்னைப் பலவந்தப்படுத்தினீர்கள். நான் ஒன்றுமில்லையென்றாலும், மகா பிரதான*

*அப்போஸ்தலருக்கும் நான் எவ்வளவும் குறைந்தவனாயிராதபடியால், உங்களாலே மெச்சிக்கொள்ளப்பட வேண்டியதாயிருந்ததே.*

20 நாம் ஜெபம் செய்வோமாக. கர்த்தராகிய இயேசுவே, கடந்த நாட்களில் மகத்தான அப்போஸ்தலன் பேசின வார்த்தைகளுடன் இன்றிரவு நீர் சில வார்த்தைகளை கூட்டி, கேட்கிற நாங்கள் அதன் மூலம் பயனடைந்து, அதை எங்கள் வாழ்க்கையில் ஏற்றுக்கொண்டு, நாங்கள் தேவனுடைய கிரியைகளாயிருக்கவும், நாங்கள் எந்தவிதமாக இருக்க வேண்டுமென்று அவர் எங்களைத் தெரிந்து கொண்டுள்ளாரோ, அந்தவிதமாக நாங்கள் உருவாக்கப்படவும் அருள் புரியும். நாங்கள் இதை இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

21 கர்த்தருக்கு சித்தமானால், நான் இன்றிரவு சில நிமிடங்கள் *வினோதமானவன்* என்னும் பொருளின் பேரில் பிரசங்கிக்கப் போகின்றேன். அது ஒரு நாணயமற்ற, பக்குவமற்ற பொருள், ஆயினும் நான் வெளிப்படுத்திக் கூற எண்ணியுள்ளதற்கு ஏறக்குறைய இந்தப் பொருள் பொருத்தமானதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

22 உங்களுக்குத் தெரியுமா, இன்றைக்கு அநேக செயல்களின் மூலம் ஜனங்கள் *வினோதமானவர்களாகின்றனர்*. அவர்களை நாம் அவ்வாறு அழைக்கிறோம். அந்த சொல்லை நீங்கள் எப்பொழுதாவது கேட்டிருந்தால், அது “விசித்திரமானவன்”, மற்றவனுக்கு “வினோதமாகக்” காணப்படுபவன் என்று பொருள்படுகிறது. நம்மில் அநேகர் ஒருவர் மற்றவருக்கு வினோதமாகக் காணப்படுகிறோம் என்பதில் சந்தேகமேயில்லை.

23 ஒரு முறை நான் கலிபோர்னியாவிலுள்ள லாஸ் ஏஞ்சலிஸில் ஒரு சாலையில் சென்று கொண்டிருந்தபோது, வினோதமாக நடந்து கொள்ளும் ஒரு மனிதனை நான் கண்டேன். அவன் சாலையில் எந்த மறியலும் செய்யாமல் பகல் வேளையில் நடந்து சென்று கொண்டிருந்தான். அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்று காண சாலையின் மறுபுறம் சென்றேன். எல்லோரும் திரும்பி அவனைப் பார்த்து அவனுடைய வினோதத் தன்மையைக் கண்டு கேலியாக சிரித்தனர்.

அவனுக்கு முன்னால் ஏதோ ஒரு அடையாளமாக ஏதோ ஒன்று எழுதி தொங்கவிடப்பட்டிருந்ததை நான் கவனித்தேன். நான் கண்ட இந்த விசித்திர விநோதமான மனிதனைக் குறித்து ஏன் எல்லோரும் சிரித்துக் கொண்டிருக்கின்றனர் என்று நான் எண்ணினேன். எனவே அவன்...ஜனங்கள் அவனைக் நோக்கிப் பார்த்ததை நான் கவனித்தேன், அவர்கள் அவனைப் பார்த்து ஏளனமாக சிரித்தனர். ஆனால் அவனுடைய சிரிப்பு வித்தியாசமான ஒன்றாக இருந்தது, திருப்தி கொண்ட ஒரு சிரிப்பாயிருந்தது. மற்றவர்களின் சிரிப்பு

அவனை கேலி செய்வதாக இருந்தது. ஆனால் இவனோ தான் செய்துகொண்டிருந்ததில் திருப்திகொண்டிருந்தவனைப் போல் தென்பட்டான்.

24 ஒரு மனிதன் தான் செய்வது சரியென்று திருப்தி கொள்ளும்போது, அது அதிகமாக யோசிக்க வேண்டிய விஷயமே. அவன் மற்றவர்களுக்கு வினோதமாக தென்பட்ட போதிலும், அவன் செய்வது சரியென்று அவன் திருப்தி கொண்டிருந்தால், அவன் அதனோடு நிலைத்திருக்கட்டும்.

அவன் அருகில் நான் சென்றபோது, அவனுடைய மார்பில் ஒரு தகடு இல்லை ஒரு பலகையில் "நான் ஒரு முட்டாள்" என்றும், அதன் கீழ் பாகத்தில் "கிறிஸ்துவுக்காக" என்றும் எழுதி தொங்கவிடப்பட்டிருந்ததை நான் கவனித்தேன். "நான் ஒரு முட்டாள்" என்றும், அதன் கீழ் பாகத்தில் "கிறிஸ்துவுக்காக" என்றும் பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது. எல்லோருமே இதை பரியாசம் செய்து கொண்டிருந்தனர்.

25 இந்த மனிதன் ஏளனம் செய்த கூட்டத்தின் மத்தியில் கடந்து சென்றுவிட்ட பிறகு, அவனுடைய முதுகில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று காண நான் திரும்பினேன். அங்கு தொங்கியிருந்த பலகையில் ஒரு பெரிய கேள்விக்குறி காணப்பட்டது. அதன் கீழே, "நீங்கள் யாருடைய முட்டாள்?" என்று கேட்கப்பட்டிருந்தது.

26 அதில் ஏதோ ஒரு கருத்து அடங்கியுள்ளது என்று நான்—நான் எண்ணினேன். நீங்கள் பாருங்கள். ஆனால் அவன் கிறிஸ்துவுக்காக முட்டாளாயிருப்பதற்கு திருப்தியடைந்திருந்தது போன்று தென்பட்டான். அவ்வாறே பவுலும் கிறிஸ்துவுக்காக "ஒரு பைத்தியமானதாகக்" கூறினான்.

27 முழு சுவிசேஷ வர்த்தக புருஷரை சேர்ந்த சகோதரர் ட்ராய் என்பவர் எனக்கு மிகவும் நல்ல ஒரு நண்பர். அவர்—அவர் ஒரு இறைச்சி வெட்டுபவர். அவர் ஒரு முறை பன்றி இறைச்சியை வெட்டிக்கொண்டிருந்தபோது, ஒரு விதமான கிருமி அவருடைய கைக்குள் புகுந்துவிட்டது. அது எவ்வகை கிருமி என்று இங்குள்ள ஆண் அல்லது பெண் யாராகிலும் அறிந்திருக்கிறீர்களா என்று உங்களைக் கேட்கிறேன். ஆனால் அது—அது உங்களை அரித்து விடும். எனவே அவருடைய உயிரைக்காக்க எண்ணி அவர்கள் அவருடைய மூன்று விரல்களை தறித்து விட வேண்டியதாயிற்று. இப்பொழுது அவர் ஒரு கையில் இரண்டு விரல்கள் மாத்திரம் கொண்டவராய், இப்பொழுதும் இறைச்சியை வெட்டும் வேலையை செய்து வருகிறார்.

28 ஜெர்மானிய நாட்டைச் சேர்ந்த ஒருவன் அவருடன் லாஸ் ஏஞ்சலிஸில் ஒரு இறைச்சி விற்கும் கடையில் வேலை செய்து வந்தான். அவர்—அவர் இந்த டச்சுக்காரனை கிறிஸ்துவினிடம் வழி

நடத்த தொடர்ந்து முயன்று கொண்டே வந்தார். அவன் “லூத்தரன்” என்றும், அது அவனுக்குப் போதுமென்றும், அவன் கூறினான். மேலும் அவன் “லூத்தரன்” சபையைச் சேர்ந்த கிறிஸ்தவனானதால் அவனுக்குத் திருப்தியடைந்து விட்டதாகவும் அவன் கூறினான். ஒரு இரவு சகோதரர் ட்ராய் அவனை சபைக்கு கொண்டு செல்லும் சிலாக்கியத்தைப் பெற்றார்.

29 அவனுடைய பெயர் ஹென்றி. ஜெர்மன் மொழியில் ஹென்றி என்பது “ஹைன்ரிச்” என்பதாகும். எனவே அவனை அவர்கள் “ஹைனி”' என்று கூப்பிடுவது வழக்கம். அந்த சொல்லை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அவர், “ஹைனி என்னுடன் இன்றிரவு சபைக்கு வரப்போவதாயிருப்பதைக் குறித்து என்ன?” என்று கேட்டார்.

30 அவன், “சரி, நான் வருவேன் என்று நான் நினைக்கிறேன்” என்றான். எனவே பண்டைய நாகரீகங்கொண்ட கூட்டத்திற்கு சென்றான். அங்கு அவர்கள் ஒரு ஜெப கூட்டத்தை நடத்திக் கொண்டிருந்தனர். அவன் உண்மையில் உணர்த்தப்பட்டு தன் இருதயத்தை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தான்.

ஓ, அடுத்த நாள் இந்த டச்சுக்காரன் தானாகவே மகிழ்ச்சியாயிருந்து கொண்டிருந்தான். அவ்வப்போது அவன் தன் கைகளை உயர்த்தினவாறு கட்டிடத்தின் வழியாக நடந்து சென்று, “தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக! கர்த்தராகிய இயேசுவே, உமக்கு நன்றி” என்று கூறிக் கொண்டிருந்தபோது, அவன் அங்கிருந்த அவர்கள் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்தான்.

31 நீங்கள் பாருங்கள், அங்கு வரிசையில் இருந்த இறைச்சி வெட்டுபவர்கள் அனைவருக்கும் அவன் வினோதமானவனாக காணப்பட்டான். அவன் இறைச்சியை வெட்டிக்கொண்டிருக்கும்போது, அவன் கர்த்தரைக் குறித்து சிந்திக்கத் தொடங்கி, அவன் அழத் தொடங்கி விடுவான். அவன் கத்தியை கீழே வைத்துவிட்டு, இடையில் உள்ள நடை பிரகாரத்தில் அங்குமிங்கும் நடந்து, வெறித்தனமின்றி, கிறிஸ்துவுக்கு தன் அன்பை வெளிப்படுத்தி, “ஓ, ‘இயேசுவே!,’ நான் உம்மை எவ்வளவாக நேசிக்கிறேன்” என்று கூறுவான். நீங்கள் பாருங்கள், முன்னும் பின்னும் நடந்து அவ்வாறு செய்வான்.

32 அவன் இப்படி செய்து கொண்டிருந்ததை அங்கு வந்த முதலாளி கண்டான். அவன் நடந்து சென்று அழுவான். முதலாளியை, அவன் முதலாளி வந்ததை ஒருபோதும் கவனிக்கவில்லை. அவன் இயேசுவைக் குறித்தே சிந்தித்துக் கொண்டிருந்தான். அவன் தன்னுடைய கரங்களை மேலே உயர்த்தி அவனுடைய கன்னங்களில் கண்ணீர் வழிந்தோட, “ஓ, தேவனே, நாம் உம்மை எவ்வளவாக நேசிக்கிறேன்!” என்று கூறத் துவங்கினான்.

முதலாளி, “ஹைனி, இந்தக் காரியம் ஏன் உனக்கு நேர்ந்தது?” என்று கேட்டான். மேலும் அவன், “இந்த வரிசை முழுவதும் உள்ள

ஒவ்வொருவரும் அதைக் குறித்து பேசுகின்றனர். ஹைனி உனக்கு ஏன் இந்த காரியம் சம்பவித்தது?” என்று கேட்டான்.

33 அதற்கு அந்த டச்சுக்காரன், “ஓ, முதலாளியே! தேவனுக்கு மகிமை, நான் இரட்சிக்கப்பட்டு விட்டேனே!” என்றான்.

அப்பொழுது முதலாளி “நீ என்ன பெற்றுக்கொண்டாய்?” என்று கேட்டான்.

அதற்கு அவன், “நான் இரட்சிக்கப்பட்டுவிட்டேன். நான் சகோதரன் ட்ராயுடன் அந்த சிறு கூட்டத்துக்கு சென்றிருந்தேன். அங்கு நான்—நான் இரட்சிக்கப்பட்டேன். இயேசு என் இருதயத்தில் வந்தார். நான் மிகுந்த அன்பினால் முழுமையாக நிறைந்தவனாயிருக்கிறேன்!” என்றான்.

அப்பொழுது முதலாளி, “நீ நட்ஸ் ஆகிய அந்த பைத்தியக்காரரின் கூட்டத்திற்கு சென்றிருக்க வேண்டும்” என்றார்.

34 அவன், “ஆம்! தேவனுக்கு மகிமை! அந்த பைத்தியக்காரர்களுக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம்!” என்றான். மேலும் அவன், “உங்களுக்குத் தெரியுமா, சாலையில் வந்து கொண்டிருக்கிற ஒரு மோட்டார் வாகனத்தை நீங்கள் எடுத்து, அந்த வாகனத்திலுள்ள எல்லா திருகாணிகளையும் நீங்கள் கழற்றிவிட்டால், அது ‘பழைய இரும்பு பொருட்களாய்’ உங்களுக்கு இருக்குமேயன்றி வேறொன்றுமாயிருக்காது” என்றான்.

35 அந்த டச்சுக்காரர் அதைக் குறித்துக் கூறினது சரியென்று எனக்குத் தோன்றுகிறது. எல்லா திருகு மறைகளையும் கழற்றிவிடுகிறீர்களா? திருகு மறைகள் தான் அவைகளை ஒன்றாக சேர்த்துப் பிடித்துள்ளன. சில நேரத்தில் சபையையும் ஒன்றாக சேர்ப்பது அதுவே என்று நான் கருதுகிறேன். அது நாகரீகத்தையும் ஒன்றாக சேர்க்கிறது.

36 சில நாட்களுக்கு முன்பு நான் பிரஸ்காட்டுக்கு விஜயம் செய்து திரும்பி வந்தேன். நான் வனாந்தரமான இடத்தை நோக்கி, எப்படி பீனிக்ஸில் ஜப்பானிய பூங்காவை, அவர்கள் அங்கே மலர்களைக் கொண்டு, அழகிய மலர்களைக் கொண்டு அமைக்க முடிந்தது என்று கவனித்தேன். நான் பையனாக இருந்தபோது, அந்த இடங்களில் மாடு மேய்ப்பது வழக்கம். பசுக்களுக்கு மேய புல் அங்கே இல்லை. எனவே அவை கள்ளிச் செடிகளை போன்றவற்றை உண்டு வாழ்ந்தன.

37 வனாந்தரத்தை அவர்கள் ஒரு இனப்பெருக்கத்திற்காக உபயோகமுள்ள இடமாக மாற்றி வருவதை நான் கவனித்தேன். வனாந்திரத்தில் நாங்கள் கண்டறிந்தது கள்ளிச் செடிகளும் பூக்களுமேயாகும். அங்கே என்னுடைய வீட்டில் இல்லை. நாங்கள் வாடகைக்கு எடுத்துள்ள அந்த வீட்டில்; சகோதரி லார்சன், இன்று காலை இங்கிருந்தார்கள் என்று நான் நினைக்கிறேன். நான் அவளைக் கண்டேன். அவர்களுடைய வீட்டின் வெளிப்புறத்தில் அவர்கள் பூச்செடிகளை வளர்க்கிறார்கள், அது மணலாயிருக்கும்.

அங்குள்ளதெல்லாம் மணல்தான். அவர்கள் அங்கு புழுதியை வீட்டின் இரு பக்கத்திலும் நிறைத்து பெரிய பூந்தோட்டத்தை அமைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு காலையிலும் நான் வெளியே சென்று இந்த பூச்செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நான் அவைகளுக்கு தண்ணீர் பாய்ச்சாவிட்டால், அவை மரித்துப் போய்விடும். அவைகள்...மேலும் அவைகளை பூச்சிகள் அடைந்து அரித்து போடாமலிருக்க, பூச்சி நாசினியைத் தெளிக்க வேண்டும்.

38 அங்கிருந்து முப்பது அடி தொலைவிற்கு நீங்கள் சென்றால், சில பூக்கள் அங்கு வளருகின்றன, அவை வனாந்தரமான இடத்தில் வளருகின்றன. நீங்கள் இருபது அடி ஆழம் தோண்டினாலும் அது ஒரு வெடி பொருளை போல சூடாயிருக்கும். அது மண்ணைத் தவிர வேறொன்றுமாய் இருக்காது. அங்கு தண்ணீரை கிடையாது. அவைகளுக்கு பூச்சி நாசினி தெளிப்பது யார்? புரிகிறதா?

ஆனால் பூந்தோட்டத்திலுள்ள செடிகளுக்கு நீங்கள் பூச்சி நாசினி தெளிக்காமலும் தண்ணீர் பாய்ச்சாமலும் இருந்தால் பூச்சிகள் அவைகளை அரித்துவிடும். ஆனால் வனாந்திரத்திலுள்ள செடிகளை பூச்சிகள் அணுகவே முடியாது. அவைகளை நாள்தோறும் பேணி பாதுகாத்து தண்ணீர் பாய்ச்ச வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அது சிருஷ்டிகரின் ஒரு உற்பத்தியாயுள்ளது. இது ஒரு கலப்பினமான இனப்பெருக்கமாயுள்ளது.

39 நான் நினைக்கிறேன், இன்றைக்கு கிறிஸ்தவ மார்க்கம் ஜனங்களுக்கு பைத்தியமாக காணப்படும் காரணம் என்னவெனில், நம்மிடையே உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் இராமல், கலப்பினமாக்கப்பட்டு மறு உற்பத்தி செய்யப்பட்டுள்ள ஒரு கூட்டத்தையே நாம் பெற்றுள்ளோம். சபையில் அவர்கள் இருக்க வேண்டும் என்பதற்காக பேணி பாதுகாக்கப்பட்டு, நாசினி தெளிக்கப்படவேண்டிய ஒரு கூட்ட கிறிஸ்தவர்களையே பெற்றுள்ளோம்.

40 முதலாம் சபை, அவர்கள் எப்படி இருந்தனர் என்று நான் எண்ணிப் பார்க்கிறேன். அதனுடன் மறு உற்பத்தி செய்யப்பட்ட இன்றைய சபையை ஒப்பிட்டுப் பாருங்கள். இதுவோ உண்மையான முதல் சபை என்னவாயிருந்தது என்பதை பாவனையாக பாசாங்கு செய்யும் ஒரு மலிவான மறு உற்பத்தியாகும், அந்த சபை பரிசுத்த ஆவியோடு தேவனுக்குள் இருந்த கரடு முரடான விசுவாசிகளைக் கொண்டதாயிருந்தது. அவர்களை நீங்கள் முதுகில் தட்டுக் கொண்டி வேண்டியதாயிருக்கவில்லை. நீங்கள் அவர்களைத் தட்டிக் கொடுத்து, நீங்கள் அவர்களை இந்த ஒன்றில் சேர்த்துக் கொள்ளுங்கள்; *இந்த* ஒன்றில் களைப்புற்றால், அவர்கள் மற்றொன்றுக்கு போகும்படி கூற வேண்டியதாயிருக்கவில்லை. நீங்கள் அவர்களுக்கு ஒரு உதவிக்காரர் பதவி அளித்தால், அவர்கள் இங்கிருந்து வந்து மற்ற ஒன்றினை விட்டுவிடவில்லை. அது ஒரு கலப்பின மறு உற்பத்தியாயுள்ளது.

41 நான் மைக்கல் ஆஞ்சலோவின் மூல வரைப்படம், அது “கடைசி இராபோஜனம்” என்னும் படம் என்று நான் நினைக்கிறேன், அதைக் குறித்து யோசித்துக் கொண்டிருந்தேன். அவன் தான் அதை வர்ணம் தீட்டினான் என்று நினைக்கிறேன். அந்த மூல படத்தின் விலை என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? அந்த மூலப் படத்தை லட்சக்கணக்கான டாலர்களாலும் விலைக்கு வாங்க முடியாது, ஏனென்றால் அது விலைமதிக்க முடியாததாயுள்ளது, அது மிகவும் உயரிய மதிப்புக்கொண்டது! ஆனால் அதன் மலிவான மறு உற்பத்தியை நீங்கள் சுமார் இரண்டு டாலர்களுக்கு வாங்கலாம்.

42 அதனால் தான் இன்றைக்கு ஜனங்கள் கரடுமுரடான உண்மையான விசுவாசிகளைப் புரிந்து கொள்ள முடிவதில்லை. அவர்கள் ஒரு பைத்தியமாகக் காணப்படுகின்றனர். உங்களுக்குத் தெரியுமா, உலகம் மிகுந்த சீர்கெட்ட நிலையை அடைந்து வருவதால், அதை நேராக்க எப்பொழுதுதாவது ஒரு முறை ஒரு பைத்தியம் தோன்ற வேண்டியதாயுள்ளது. சிறிது வேறுபட்ட யாராகிலும் ஒருவர் காட்சியில் தோன்றும்போது, அவன் அந்த சந்ததிக்கு பைத்தியமாயிருக்கிறான். யாரால் முடியும் என்று அன்றொரு நாள் நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

யார்தான் இன்றைக்கு ஒரு பைத்தியம் அல்ல? நீங்கள் யாராவது ஒருவருக்கு பைத்தியமாக இருக்கின்றீர்கள். உலகம் முழுவதுமாகவே பைத்தியக்கார நிலைமையை அடைந்து வருகிறது என்று நான் நம்புகிறேன். சரியானதற்கும், தவறானதற்கும் அல்லது உண்மைக்கும் பிழைக்கும் ஜனங்கள் வித்தியாசம் அறிய முடியாத காலம் இதுவென்று உங்களுக்குத் தெரியுமா?

43 அரசியல்வாதிகளால் சரியானதையும் தவறானதையும் நிதானிக்க முடியாது என்பதை நீங்கள் அறிவீர்களா? வேதாகமத்தை மறுபடியும் சபையில் இல்லை மறுபடியுமாக பள்ளிக்கூடங்களில் படிக்க வேண்டும் என்று ஓட்டு போடும் விஷயத்தில் அவர்கள் மௌனமாயிருப்பதை நீங்கள் காண்கிறீர்களா? அரசியல் எப்பக்கத்தில் சாயப்போகின்றது என்று அவர்கள் அறியாமலிருக்கின்றனர். அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்! இந்தியானாவில் அது எப்படி உள்ளது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அரிசோனா நாட்டில், வேதாகமத்தை பள்ளிக்கூடங்களில் படிப்பது சட்ட விரோதமானது. இந்தியானாவிலும், ஐக்கிய நாடுகள் முழுவதும் அதேக் காரியம் தான் என்று நான் நினைக்கிறேன். ஏனெனில் ஏதோ ஒரு நாத்தீக ஸ்திரீ முழு திட்டத்தையும் மாற்றி அமைத்து விட்டாள். நமது பொது ஜன பள்ளிக்கூடங்களில் வேதாகமத்தை படிப்பதென்பது சட்ட விரோதமானது என்பது ஞாபகமிருக்கட்டும். ஆனால் விசுவாசிகள் செலுத்தும் வரிகள் பள்ளிக்கூடங்களில் அவிசுவாச துரோகத்தை கற்பிக்க உதவுகின்றன.

44 அரசியல். நமக்கு மற்றொரு ஆபிரகாம் லிங்கன் தேவையாயுள்ளது. நமக்கு மற்றொரு பாட்ரிக் ஹென்றி தேவையாயுள்ளது. அரசியல் சார்பின்றி சரியானதை "சரியானதென்றும்" தவறை "தவறென்றும்" தைரியமாக எடுத்துரைக்கும் அமெரிக்கர் ஒருவர் நமக்கு தேவைப்படுகிறது.

45 தேவனுடைய வார்த்தையா அல்லது ஸ்தாபன சபையா, எது சரியென்று இன்றைய போதகர்களால் நிதானித்து அறிய முடியவில்லையென்பது உங்களுக்குத் தெரியுமா? எந்த பாதையில் செல்வதென்று அவர்கள் அறியாமலிருக்கின்றனர். எது சரி என்றும் எது தவறென்றும் அவர்களால் நிதானிக்க முடியவில்லை. "வேதாகமம் அவ்வாறு உரைக்கிறதென்று எனக்குத் தெரியும், ஆனால் எங்கள் சபையோ இவ்விதம் கூறுகிறதே…" பாருங்கள், எது சரியென்றும் எது தவறென்றும் நிதானிக்க ஜனங்கள் திறனற்றவர்களாயுள்ளனர். வேதாகமத்துக்கு முரணாயுள்ள எதுவுமே தவறாகும். தேவனுடைய வார்த்தையே சரி, ஒவ்வொரு மனிதனுடைய வார்த்தையும் பொய். அது தேவனுடைய வார்த்தைக்கு முரணாக அமைந்துள்ளது. இதைப் போன்ற ஒரு—ஒரு—ஒரு நேரத்தில் சரியான ஒன்றின் மேல் நீங்கள் நிற்க முயன்றால், நீங்கள் ஒரு பைத்தியமாகிவிடுகிறீர்கள்.

நாம் சில விசேஷித்த குணாதிசயங்கொண்டவர்களை நினைவுப்படுத்திக் கொள்வோமாக.

46 என்னால் தீர்க்கதரிசியாகிய நோவாவை நினைத்துப் பார்க்க முடிகிறது, அவன் மகத்தான காலத்தில் வாழ்ந்தான். அந்த மகத்தான விஞ்ஞான காலத்தில் அவர்கள் கூர்நுனிக் கோபுரங்களையும், பெண்முக சிங்க உருவ சிறகுடை சிலைகளையும் கட்டினர். ஆகாயத்தில் தண்ணீர் இல்லையென்று விஞ்ஞான ஆராய்ச்சியின் மூலம் அவர்களால் நிரூபிக்க முடிந்தது. இதோ இந்த கிழவன் அங்கு வந்து "வானத்திலிருந்து மழை பெய்யப் போகிறது" என்று கூறுகிறான். நோவா அந்த சந்ததிக்கு ஒரு பைத்தியமாக இருந்தான். அவன் ஒரு பைத்தியமாகிவிட்டான்.

47 நாம் மோசேயைக் குறித்து சிந்திப்போம். இன்று காலை நாம் பேசினது போன்று, மோசே பார்வோனிடம் சென்றபோது, மோசே பார்வோனிடத்திற்கு போய், "இந்த அடிமைகளை வெளியே கொண்டு போக கர்த்தர் என்னை அனுப்பினர்" என்றான். அவன் கையில் ஒரு கோலோடு, முழு உலகத்தையும் வென்ற அந்த மகத்தான சேனைக்கு எதிராக நின்றான். பார்வோன் தன்னுடைய விஞ்ஞான பாண்டித்தியம் பெற்ற அனைவரிலும், மோசேயை ஒரு பைத்தியமாக நினைத்தான். அவன் அவர்களுக்கு ஒரு பைத்தியமாக இருந்தான்.

48 தீர்க்கதரிசியாகிய எலியா நாகரீகம் செழித்தோங்கிய தன்னுடைய மகத்தான காலத்தில் வாழ்ந்ததை என்னால் நினைத்துப் பார்க்க

முடிகிறது. அந்நாட்களில் ஆகாபும் யேசபேலும் உலகத்தை ஆண்டனர். யேசபேல் உடுத்த விரும்பின நாகரீக உடைகள் போன்றவற்றை, அவள் மற்ற பெண்களும் உடுத்தும்படி செய்தாள். அவள் தீட்டிய வர்ணங்கள், அவளை அழகாக்கிக் கொண்ட அவளுடைய நாகரீகமுறைகள், அவள் தன்னை அழகாக்கிக் கொண்ட விதம். பைத்தியக்கார கிழவனாகிய எலியா காட்சியில் தோன்றி முழு தேசத்தையும் எதிர்த்தபோது, அவன் ஆகாபுக்கு ஒரு பைத்தியக்காரனாக காட்சியளித்தான். அது உண்மை!

49 தீர்க்கதரிசியாகிய ஆமோஸ் இன்றைய நவ நாகரீக திரைப்படத்துறையான ஹாலிவுட்போல் அந்நாளில் திகழ்ந்த சமாரியாவுக்கு சென்றான். அங்கு பெண்கள் வீதியிலேயே ஆபாசமாக உடை உடுத்தி, பகிரங்கமாக விபச்சாரத்தில் ஈடுபட்டிருந்தனர், அவர்கள் எவ்வாறு பகிரங்கமாக மற்ற மனிதனோடு வாழ்ந்தனர்…

50 இன்றைக்கும் அவ்வாறே அது உங்கள் முன்னிலையில் பகிரங்க விபச்சாரமாயுள்ளது. உண்பதற்காக அன்றொரு இரவு ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு சென்றிருந்தேன். அங்கு இளைஞர்களும் இளம் பெண்களும் துணிகரமாக கட்டித் தழுவி முத்தமிட்டுக் கொண்டிருந்தனர்.

என் சகோதரியே, அது மறைவான விபச்சாரம் என்று உனக்குத் தெரியுமா? ஒரு மனிதன் உன்னை முத்தம் செய்யும்போது, அவன் மறைமுகமாக உன்னுடன் விபச்சாரம் செய்தாயிற்று. உனக்கு அவனுடன் கல்யாணமாகும் வரைக்கும் அவன் உன்னை முத்தம் செய்ய நீ ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. ஏனெனில் சுரப்பிகள், ஆண், பெண் சுரப்பிகள் இரண்டுமே உதடுகளில் உள்ளன. உங்களுக்குப் புரிகிறதா? ஆண் பெண் சுரப்பிகள் ஒன்று சேரும்போது, அது எங்கிருந்தபோதிலும், நீங்கள் மறைவாக விபச்சாரத்தில் ஈடுபடுகின்றீர்கள். உன் முகத்திலிருந்து அந்த திரை தூக்கப்பட்டு நீ அவன் மனைவியாகும் வரைக்கும், அவன் உன்னை முத்தமிட அனுமதிக்கக் கூடாது. அப்படி செய்யாதே! அது விபச்சாரம் செய்தல். அது ஆண் சுரப்பிகளும் பெண் சுரப்பிகளும் ஒன்றாக கலத்தல்.

51 ஏன் ஒரு ஆண் மற்றொரு ஆணை, ஒரு பெண் மற்றொரு பெண்ணை உதடுகளில் முத்தமிடுவதில்லை? ஏனெனில் சுரப்பிகள் ஒன்றோடொன்று இனம் கலவாது. சுரப்பிகளின் இனக்கலப்பினால் குழந்தைகள் பிறக்கின்றன.

எனவே அது எங்கு பார்த்தாலும் ஏறக்குறைய பகிரங்க விபச்சாரமாய் உள்ளது. விளம்பரத் திரைகளையும் மற்றும் நீங்கள் காண்கிற ஒவ்வொன்றிலும் உமிழ்நீர் வழியும்படி உள்ள காரியங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஒழுக்கக்கேடு சீரழிந்த நிலையில் உள்ளதில் வியப்பொன்றுமில்லையே! அந்த ஸ்திரீகளை

உதடுகளில் முத்தமிடுவதால் தங்களை எல்லாவற்றிற்கும் தூண்டுகிற அது விபச்சாரம் என்பதை அறிந்தும் அவர்களால் அதை எப்படி செய்ய முடிகிறது? நீங்கள் மனந்திரும்பினாலொழிய தேவன் அதை மன்னிக்கமாட்டார்.

52 இப்பொழுது, இந்த மகத்தான தீர்க்கதரிசியாகிய ஆமோஸ் அங்கு வந்தபோது, அவன் சிறிய தீர்க்கதரிசிகளில் ஒருவனாக அறியப்படுகின்றான், ஏனெனில் அவனைக் குறித்து அதிகம் எழுதப்படவில்லை. ஆனால் அவன் தேவனுடைய வார்த்தையைக் கொண்டிருந்தான். அவன் நகரத்தை நோக்கிப் பார்த்து,...அங்கு பூங்காக்களில் ஆண்கள் பெண்களின் தோள்கள் மேல் கரத்தைப் போட்டுக் கொண்டும், பெண்கள் ஆண்களின் தோள்கள் மேல் கரத்தைப் போட்டுக் கொண்டுமிருக்க, அது ஒரு நவநாகரீகத் திரைப்படத் துறையான ஹாலிவுட்டைப் போன்றிருந்தது. அவன் நகரத்தின் வழியே நடந்து சென்று, “நீங்கள் மனந்திரும்புங்கள் இல்லையேல் அழிந்து போவீர்கள்!” என்றான். அவன் ஒரு பைத்தியக்காரனாக இருந்தான். அவர்களுக்கு அவன் கிட்டத்தட்ட தன்னை பைத்தியக்காரனாக வெளிப்படுத்திப் பேசினான்.

53 யோவான் ஸ்நானன், அவன் காட்சியில் தோன்றினபோது, அந்த நாளின் மத ஸ்தாபனங்களுக்கு, அவன் பைத்தியக்காரனாக இருந்தான். அவன் தன் தகப்பனின் அடிச்சுவடுகளைத் தொடர்ந்து ஒரு ஆசாரியனாக ஆகும் வாய்ப்பு உண்டாயிருந்தது. ஆனால் அவன் அப்படி செய்ய மறுத்தான், ஏனெனில் அவனுடைய வேலை மிகவும் முக்கியமானதால், தேவன் அவனை அந்த கோட்பாடுகள் மற்றும் ஸ்தாபனங்களிலிருந்து விலக்கி காத்துக் கொண்டார். அவன் மேசியாவின் வருகையை அறிவிக்க வேண்டியவனாயிருந்தான். அவன் பரிசேயர், சதுசேயர், மற்றவர்களுடன் எவ்வித தொடர்பும் கொள்ளாமல், அது என்னவாயிருந்தாலும் அந்த முழு கூட்டத்தையும் புறக்கணித்து, “ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லத் தொடங்காதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்கு பிள்ளைகளை உண்டு பண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்றான். அவனுடைய நாட்களில் இருந்த மத உலகிற்கு அவன் ஒரு பைத்தியக்காரனாக இருந்தான். உண்மைதான்.

54 இயேசு காட்சியில் வந்தபோது, அவருடைய நாட்களில் இருந்த மத சம்பந்தமான மக்களுக்கு அவரும் கூட ஒரு பைத்தியமாகவே காணப்பட்டார். காரணம், அவர்கள், “நீ ஒரு சமாரியன். நீர் உம்முடைய சரியான சிந்தையில் இல்லை. நீர் ஒரு பைத்தியம் பிடித்த மனிதன்” என்றனர். வேறுவார்த்தைகளில் கூறினால், “ஒரு பித்து பிடித்த மனிதன்” என்பதாகும். உங்களுடைய கர்த்தரும் இரட்சகருமானவர் அவர்களுக்கு அவ்வாறு தென்பட்டார்.

ஆசாரியனாயிருப்பதற்கு, என்றாவது ஒரு நாள் ஒரு பிரதான ஆசாரியனாவதற்கும் கமாலியேலால் பவுல் பயிற்றுவிக்கப்பட்டதில்

வியப்பொன்றுமில்லையே. அவன் தமஸ்குவுக்குப் போகும் தன்னுடைய பாதையில் இருந்தபோது, இயற்கைக்கு மேம்பட்ட ஒரு ஒளியினால் கீழே வீழ்த்தப்பட்டான். அவன் மேலே நோக்கின போது, அவன் ஒரு யூதனாயிருந்தபடியால், அதுதான் தன் ஜனங்களை வழி நடத்தின அக்கினி ஸ்தம்பமாயிருந்தது என்று அறிந்து கொண்டான். அப்பொழுது அவன், "ஆண்டவரே, நீர் யார்?" என்றான்.

அதற்கு அவர், "நானே இயேசு" என்றார்.

55 அவன் தன் கல்வியைக் கைவிட்டு, பள்ளிகளில் பயிற்றுவிக்கப்பட்டிருந்த அவனுடைய எல்லா வேத சாஸ்திரத்தையும் கைவிட்டுவிட்டு, வழக்கமான ஒரு தெருப் பிரசங்கியாக மாறினபோது, அவன் ஒரு பையத்தியமாக திகழ்ந்தான். அவன், "நான் கிறிஸ்துவுக்காக பைத்தியமானேன்" என்றான்.

56 அவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாக ஜனங்கள் எண்ணினர். அவன் பெஸ்துவிடம், "நான் பைத்தியக்காரன் அல்ல" என்றான். அவன் கர்த்தரை அறிந்திருந்தான். ஆனால் ஒரு மத சம்பந்தமான கூட்டத்தில் கர்த்தரை அறிந்திருப்பது...

இதை நீங்கள் காணத் தவறமாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன். இந்த நாளில் மத சம்பந்தமான ஒரு கூட்டத்தின் மத்தியில் இயேசுவை அறிந்திருப்பது உங்களை பைத்தியக்காரனாக்கிவிடுகிறது. அது மாறவேயில்லை. இதில் நான் அதிக நேரம் நிலைத்திருக்கலாம், ஆனால் நான்—நான் ஜெப வரிசைக்காக வேகமாக முடிக்க விரும்புகிறேன்.

57 அந்த ஜெர்மன் குருவானவரான மார்டின் லூத்தர் ஒரு நாள் இராபோஜனத்தை கையிலெடுத்து படிக்கட்டின் மேல் எறிந்து, "இது இயேசுகிறிஸ்துவின் சரீரம் அல்ல. இது இங்கு செய்யப்பட்ட அப்பம்" என்றார். "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" என்று அவர் பிரகடனம் செய்தார். அவர் கத்தோலிக்க சபைக்கு ஒரு பைத்தியக்காரனாகக் காணப்பட்டார். அவர் அப்படி செய்ததற்காக அவர்கள் அவரைக் கொன்றிருக்கலாம். ஆனால் அவர் ஒரு பைத்தியக்காரன் என்றே கருதி அவர்கள் அவரை அப்படியே விட்டுவிட்டனர். ஆனால் அந்த சந்ததிக்கு ஒரு பைத்தியமானார்.

58 இங்கிலாந்தில் அதிக ஒழுக்கக் கேடான நாட்களில் ஜான் வெஸ்லி இருந்தார். வெஸ்லியின் எழுப்புதல் காட்சிக்கு வராதிருந்தால்...முழு உலகமே சிதைக்கப்பட்டு, எங்கும் ஒழுக்கக் கேடு காணப்பட்டிருக்கும். ஆங்கிலிக்கன் சபை வெகு தூரம் அகன்று சென்று, அது கால்வீனிய கருத்துக்களைக் கொண்டதாய், இனி ஒருபோதும் எழுப்புதல் கிடையாது என்னும் நிலையை அடைந்துவிட்டது. அப்பொழுது ஜான் வெஸ்லி வார்த்தையினால் பரிசுத்தமாக்கப்படுதல் என்பதுடன் காட்சியில் எழும்பி, ஒழுக்கங்கெட்ட நிலையை சுத்தம் செய்யத் தொடங்கினார். அவர் ஒரு பைத்தியமானார்.

59 திரு.வெஸ்லி ஒரு முறை எழுதின புத்தகத்திலிருந்து இதை மேற்கோள் காட்டுகிறேன். அவர் ஒரு வழியில் வந்து கொண்டிருந்தபோது, இங்கிலாந்து சபையைச் சேர்ந்த ஒருவன்… அவர்கள் எல்லோரும் அவரை பைத்தியக்காரன் என்று கருதினர். எனவே அவன் அவரை வழி மறித்தான். திரு.வெஸ்லி சிறு உருவம் படைத்தவர். பெரிய உருவம் படைத்த அவன் அவரைக் கன்னத்தில் அடித்து கீழே தள்ள எத்தனித்து வழி மறித்து நின்றான். திரு.வெஸ்லி மேலே நடந்து வரும்போது, "ஐயா, என்னை மன்னியுங்கள். நீங்கள் வழி விடுகின்றீர்களா? நான் அவசரமாக செல்கிறேன்" என்றார்.

அந்த ஆங்கிலிக்கன், "நான் ஒரு முட்டாளுக்காக வழி விடுவதில்லை" என்றானாம்.

60 திரு.வெஸ்லி மிகவும் மரியாதையுடன் தன் தொப்பியை கீழே இறக்கி விட்டு, அவனைச் சுற்றி நடந்து சென்று, "நான் எப்பொழுதும் முட்டாளுக்கு வழிவிடுபவன்" என்றாராம். எனவே நீங்கள் பாருங்கள், அவன்தான் உண்மையில் பைத்தியக்காரனாக இருந்தான்; ஒருவர் கிறிஸ்துவுக்காக அப்படி இருந்தார்; மற்றவன் தன் சபைக்காக அப்படி இருந்தான்.

எனவே நீங்கள் இன்னமும் யாருடைய பைத்தியமாகவாகத்தான் இருக்கிறீர்கள்.

61 ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு பெந்தெகொஸ்தேயினர் காட்சியில் வந்தபோது, அவர்கள், "அந்த ஜனங்கள் பைத்தியக்காரராயிற்றே!" என்றனர். அவர்கள் பைத்தியக்காரராக காணப்பட்டனர் என்பது உண்மையே. ஏனெனில் அவர்கள் காட்சியில் எழும்பினபோது சபைகளில் காணப்பட்ட எல்லா சீர்கேட்டையும் கடிந்து கொண்டனர்.

ஆனால் பெந்தேகொஸ்தேயினர் என்ன செய்து விட்டனர்? அவர்கள் வெளிவந்த அதே வாந்திக்கு, அதே ஸ்தாபன சீர்கேட்டிற்கே திரும்பிச் சென்றுவிட்டனர். அது என்னவென்று தெரியுமா? அது வேறொரு பைத்தியத்திற்கான நேரமாகும். ஆம், அது மற்றொன்றிக்கான நேரமாயுள்ளது. அது உண்மை.

62 கவனியுங்கள், ஒரு திருகு மறையாணி, ஒரு திருகு மறையாணி இருப்பதற்கு முன்பு, அந்த திருகு மறையாணி பொருந்துவதற்கு ஒரு அச்சாணி (bolt) இருக்க வேண்டும். அந்த திருகு மறையாணி ஒரு அச்சாணி மறையுடன் இணைகிறது. அப்படி இணையாவிட்டால், அது உபயோகமில்லை. கவனியுங்கள், நோவாவின் காலத்தில் அச்சாணி மறையினால் இணைக்கப்பட்டவர்கள் அனைவரும், சுவிசேஷ செய்தியுடன் அச்சாணி மறையினால் இணைக்கப்பட்டிருந்தனர். பைத்தியக்காரனான நோவா அவர்களை பேழைக்குள் இழுத்துக் கொண்டான். உங்களுடைய அச்சாணி மறைகள் என்னவென்பதைப் பொறுத்தது. நீங்கள் எதனுடன் மறையினால் இணைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது.

நீங்கள் உலகத்துடன் இணைக்கப்பட்டிருந்தால், அந்த உலகம் உங்களை இழுத்துக் கொள்ளும். நீங்கள் வார்த்தையுடன் இணைக்கப்பட்டிருந்தால், வார்த்தை உங்களை இழுத்துக் கொள்ளும். எனவே நீங்கள் எதனுடன் திருகு மறையினால் இணைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்றும், எந்த அச்சாணியை பின்பற்றுகிறீர்கள் என்பதையுமே அது பொறுத்தது.

63 ஆனால் நோவா, தேவனுடைய வார்த்தையுடன் ஒரு பைத்தியமாக இணைந்திருந்த காரணத்தால், அவன் வாழ்ந்த விஞ்ஞான உலகிற்கும், அவன் பைத்தியமாக இருந்தபடியால் அவன் பேழைக்குள்ளாக இரட்சிக்கும்படியாக அவர்களை இழுத்துக் கொண்டான். ஆமென். அவர்கள் முன்குறிக்கப்பட்டிருந்தனர், அந்த திருகாணிக்கு முன்பே அந்த அச்சாணி உண்டாக்கப்பட்டிருந்தது. எந்த ஒரு அச்சாணியும் திருகாணியினால் இணைக்கப்பட வேண்டும்.

64 ஆகையினால் சாத்தான், அவனும் கூட சில அச்சாணிகளையும், திருகாணிகளையும் உடையவனாயிருக்கிறான். அதாவது இவ்வுலக இராஜ்ஜியங்களின் அச்சாணிகளாகும்.

பார்வோன் நோவாவுக்கு இல்லை மோசேக்கு பைத்தியமாக காணப்பட்டது போன்றே மோசே பார்வோனுக்கு பைத்தியமாகக் காணப்பட்டான். பார்வோன் தன்னுடைய எல்லா விஞ்ஞான வித்தைகளினால், தன் நாட்டையே தன் பக்கம் இழுத்துக்கொண்டான். நோவா தேவனுடைய பைத்தியமாக இருந்த காரணத்தால், சபையை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்கு இழுத்து சென்றான். நீங்கள் எதனுடன் இணைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை அது பொறுத்தது. நோவா சபையை உலகத்திலிருந்து பேழைக்குள் இழுத்துக் கொண்டது போன்று, மோசேயும் சபையை எகிப்திலிருந்து இழுத்தான். மோசே எகிப்திலிருந்து சபையை தேவனுடைய வாக்குத்தத்தம் பண்னப்பட்ட தேசத்திற்கு இழுத்தான்.

65 இயேசு சொன்னார். இப்பொழுது, கவனமாயிருங்கள். ஏனெனில் இந்த திருகாணிகளும், அச்சாணிகளும் காண்பதற்கு ஒன்று போல் இருக்கும். மறையிடப்பட்ட திருகாணியை கவனித்துப் பாருங்கள். மத்தேயு 24:24-ல் அவர், "கூடுமானால் அது தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கும்" என்று கூறியுள்ளார்.

இப்பொழுது அமெரிக்கர்களுக்கும் உலகம் அனைத்திலுமுள்ள ஸ்தாபனங்களுக்கும் ஒரு திருகாணி தேவையாயுள்ளது.

66 மெத்தோடிஸ்டுகள், பாப்டிஸ்டுகள், பிரஸ்பிடேரியன்கள், அவர்கள் அனைவரும் *இதில், அதில்* என்று சிதறடிக்கப்பட்டு யாவரும் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர். எப்படியாயினும் அவர்கள் அனைவரும் ஒரே அச்சாணித் திருகு மறையினால் இணைக்கப்பட்டுள்ளனர். எனவே தேவன் அவர்களுக்கு ஒரு அச்சாணியை அளித்து, உலக சபைகளின் ஆலோசனை சங்கம்

என்னும் திருகாணியை அனுப்பியுள்ளார். அது அவர்கள் யாவரையும் ஒன்றாக இழுத்துக் கொள்ளும். அது உண்மை! அது நிச்சயம் அப்படிச் செய்யும். அந்த உலக ஆலோசனை சங்கம் அவர்களை ஒன்றாக இழுத்துக் கொள்ளும்.

67 உங்களுக்குத் தெரியுமா, அண்மையில் இங்கும் கூட அது வந்தடைந்து விட்டது…எதுவும் ஒரு காரணமாகவே, காரணமில்லாமல் எதுவுமே நடைபெற முடியாது. பெண்கள் தங்களுடைய உடைகளை களைய விரும்புகின்றனர். அவர்கள் குட்டைக்கால் சட்டைகளை அணிய விரும்பிவிட்டனர். அதே சமயத்தில் அவர்கள் சபையை சார்ந்திருக்க விரும்புகின்றனர். அவர்கள் உடலோடு ஒட்டிய சிறிய நீச்சல் ஆடையை அல்லது அதை நீங்கள் என்ன என்று அழைக்கிறீர்களோ அந்த உடைகளையே அணிய விரும்புகின்றனர். அவர்கள் அதை அணிய விரும்பி அதே சமயத்தில் அவர்கள் சபையை சார்ந்திருக்க விரும்புகின்றனர். அவர்கள் கூச்சலிட்டு சத்தமிட்டு நடனமாட விரும்புகின்றனர்; ஆராதனை, அது ஒரு ஆராதனை.

68 இப்பொழுது எனக்கு நேரமிருந்தால் நான் அதை உங்களுக்கு நிரூபித்து காட்டுவேன். அதைப் போன்று நடனமாடி, அந்த காரியங்களை செய்வது, அது ஒரு பிசாசின் வழிபாடாய் உள்ளது. அது அஞ்ஞான நாடுகளில் நடப்பதை என்னால் உங்களுக்கு நிரூபித்துக் காண்பிக்க முடியும். அவர்கள் இவ்விதமாக ஆராதனை செய்து, அதே சமயத்தில் தங்கள் சாட்சியைக் காத்துக் கொண்டு சபையில் தங்கியிருக்க விரும்புகின்றனர். எனவே தேவன் அவர்களுக்கு இரண்டு மூன்று திருகாணிகளைத் தந்தருளினார். எல்விஸ் ப்ரஸ்லி என்று பெயரிடப்பட்ட ஒருவர், ஒருவர் பாட் பூன் மற்றும் எர்னி ஃபோர்டு, இவர்கள் தேவனுடைய பாடல்களைப் பாடி தங்களை இன்னமும் கிறிஸ்தவர்கள் என்று உரிமை கோருகின்றனர். அது ஒரு திருகாணி. ஆனால் அது வார்த்தை என்ற அச்சாணியில் இணைக்கப்பட்டிருக்கவில்லை. உண்மை!

இப்பொழுது, நான் அரை மணி நேரத்தில் முடித்து விடுவேன் என்று நான் கூறினேன். அதுவோ கடந்து விட்டது. ஆனால் கவனியுங்கள்.

69 உலகத்திற்கு ஒரு திருகாணி தேவைப்படுகிறது. அவர்கள் அதைப் பெற்றுக் கொள்ளும்படி பிசாசு செய்துவிடுவான். அவர்கள் ஏற்கனவே அதற்கென்று மறையிடப்பட்டுள்ளனர்.

ஆனால் உலகம் ஒரு திருகாணியில் இணைக்கப்பட வரும்போது, மணவாட்டி என்று அழைக்கப்படும் ஒரு கூட்ட ஜனங்கள் உள்ளனர். அவர்களும் மறையிடப்பட்டிருக்கின்றனர். நான் இங்கு நின்று கொண்டிருப்பது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாக தேவன் ஒரு திருகாணியை அனுப்பி, மணவாட்டியை இந்த குழப்பத்திலிருந்து வெளியே இழுத்து அவருடைய

பிரசன்னத்தில் சேர்த்துக் கொள்வார். அது வார்த்தையினால் மறையிடப்பட்ட ஒரு திருகாணியாய் இருக்கும்.

70 சில நாட்களுக்கு முன்பு குற்றம் கண்டுபிடிப்பவர் ஒருவர் டூசானில் என்னிடம், "உங்களுக்குத் தெரியுமா, சிலர் உங்களை பைத்தியக்காரராக கருதுகிறார்கள், மற்றவர்கள் உங்களை ஒரு தேவனாக்கிவிடுகிறார்கள்" என்றார்.

அப்பொழுது நான், "அந்த வகையான காரியங்கள் இருக்கட்டும்" என்றேன். அவர் என்னை விமர்சிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறார் என்பதை நான் அறிந்திருந்தேன். புரிகிறதா?

71 அவர், "ஜனங்கள் உங்களை ஒரு தேவனாக கருதுகிறார்கள்" என்றார்.

72 நான், "பாருங்கள், சற்று..." என்றேன். ஜனங்கள் அவ்விதம் செய்வதில்லையென்று எனக்குத் தெரியும். அவர் அதை புரிந்து கொள்ளவில்லையென்று நான்—நான் அறிந்து கொண்டேன், ஏனென்றால் அவர் தோலின் மற்றொரு பக்கத்தில் இருந்தார், நீங்கள் பாருங்கள். எனவே அவர் அதை புரிந்து கொள்ளவில்லை, அவர் அதை அறிந்திருக்கவில்லை என்பதை நான் அறிந்திருந்தேன். எனவே நான், "அது தேவனுடைய வார்த்தைக்கு தூரமாயிருக்கவில்லை. அப்படித்தானே?" என்றேன்.

நாம் இழக்கப்பட்டிருக்கவில்லை என்பதை அவர்—அவர் அறிந்து கொள்ளட்டும், பாருங்கள். நாம் எங்கே நின்று கொண்டிருக்கிறோம் என்பதை நாம் அறிவோம். நாம் எந்தவிதமான பாய்மரத்தை உயர்த்தியிருக்கிறோம் என்றும், எந்தவிதமான காற்று அதன் மேல் அடிக்கிறது என்றும் நாம் அறிவோம். நமது மறை என்னவென்பதையும், நமது திருகு ஆணி என்னவென்பதையும் நாம் அறிவோம். நாம் எப்படி நின்று கொண்டிருக்கிறோம் என்பதை நாம் அறிவோம்.

நான், "அது தேவனுடைய வார்த்தைக்கு ஒன்றும் அதிக முரணாயிருக்கவில்லை, அப்படித்தானே?" என்றேன். மேலும் நான், "நினைவிருக்கட்டும், தேவன் மோசேயை இஸ்ரவேல் புத்திரரிடம் அனுப்பினபோது, தேவன் மோசேயை ஒரு தேவனாக ஆக்கினர். அது உண்மை. அவனுடைய சகோதரனாகிய ஆரோனை ஒரு தீர்க்கதரிசியாகவும் ஆக்கினார். அது உண்மை. 'தீர்க்கதரிசிகள் யாவரும்' 'தேவர்கள்' என்று இயேசு கூறினார். அந்த மனிதர்கள் தேவர்கள்" என்றேன். அது உண்மை. தேவன் அவ்விதமாகவே அதைப் பொருட்படுத்துகிறார்.

73 கவனியுங்கள், நாம் பிரசங்கிக்கும் வார்த்தையும், இன்று காலை நான் கூறின வார்த்தைகளும், "தேவன் தோல்களின் பின்னால், தகசுத் தோல்களின் பின்னால் மறைந்து கொண்டிருத்தல், தேவன் ஒரு மனிதனின் தோலின் பின்னால் மறைந்து கொண்டிருத்தல்." பாருங்கள்? அதைத்தான் அவர் செய்தார். தேவன் இவ்வுலகில்

வெளிப்படுத்தப்பட்டபோது, அவர் ஒரு திரைக்குப் பின்னால், இயேசு என்றழைக்கப்பட்ட ஒரு மனிதனின் தோலின் பின்னால் மறைந்து கொண்டிருந்தார். அவர் திரையிடப்பட்டு, மோசே என்றழைக்கப்பட்ட மனிதனின் தோலின் பின்னால் மறைந்து கொண்டிருந்தார். அவர்கள் தேவர்களாயிருந்தனர், தேவனாயல்ல; ஆனால் அவர்கள் தேவர்களாயிருந்தனர். ஒரே தேவன் தமது முகமூடியை மாற்றி ஒவ்வொரு முறையும் அதையே செய்து, இந்த வார்த்தையைக் கொண்டு வந்தார். பாருங்கள், தேவன் அதை அந்தவிதமாகத்தான் செய்தார். மனிதன் ஏதாவதொன்றை காண வேண்டுமென்பதை அவர் அறிவார். நாம் ஒவ்வொருவரும் இந்த உலகத்தில் பிறந்திருக்கிறோம்.

74 நான் இந்தக் காலை உங்களுக்கு கூறிக்கொண்டிருந்ததுபோல, யாரும் மோசேயை பின்தொடர்ந்து அங்கு செல்ல துணிச்சல் கொள்ளவில்லை. தேவன் இரண்டு பேர்களுடன் ஒரே நேரத்தில் ஈடுபட்டதில்லை, அவர் எப்பொழுதும் ஒருவருடன் மாத்திரமே ஈடுபடுகிறார். மோசேயைப் போல பாவனை செய்ய யாரும் துணிச்சல் கொள்ளவில்லை. அவனை பாவனை செய்து அவனுடன் அக்கினி ஸ்தம்பத்திற்குள் செல்லுதல் மரணத்தை, இயற்கையான மரணத்தை விளைவித்திருக்கும். எனவே எல்லா ஜனங்களும் அதற்கென்று உண்டாக்கப்படவில்லை...அந்த இயற்கைக்கு மேம்பட்ட அதற்குள் செல்ல நீங்கள் அந்தவிதமாக பிறந்திருக்கவில்லை.

ஆனால் தேவனிடத்திலிருந்து ராஜ்ய தூதராக பூமியின் மேல் அவரை சுட்டிக்காட்ட ஒருவரை நியமிக்கிறார். இந்த ராஜ்ய தூதர் அந்த மகத்தான, அறியப்பட்டிராத இயற்கைக்கு மேம்பட்ட ஒன்றுக்குள் சென்று, மாம்ச சிந்தை அறிந்து கொள்ளக் கூடாதவைகளை அறிந்து கொள்வதற்கென தேவனால் நியமிக்கப்பட்டவர். அது தேவனுடைய இரகசியங்களை வெளிப்படுத்தி, ஏற்கனவே நடந்தவைகளை அறிவித்து, இனி நடக்கப்போகும் காரியங்களை முன்னறிவிக்கிறது. அது என்ன? தேவன், தோலின் பின்னால், மானிடத் தோலின் பின்னால் தேவன்! முற்றிலும் உண்மை!

75 சாம் கான்னலி டூசானில் வசிக்கிறார். அவர் அநேக ஆண்டுகளுக்கு முன்பு திரு.கிட் என்பவருடன் இங்கு வந்து, பல ஆண்டுகளாக அவருக்கிருந்த குடற்புண் நீங்கி குணமாக்கப்பட்டார். கடந்த இலையுதிர் காலத்தில் நான் சென்றிருந்த போது, சாமின் குடலில் ஒரு—ஒரு கல் உண்டாயிருந்தது. டூசானிலுள்ள மருத்துவ நிபுணர் பரிசோதித்து பார்த்தபோது, அது கோலி அளவு பெரியதாயிருந்தது. சகோ. சாம் கான்னலி...இங்குள்ள உங்களில் அநேகருக்கு அவரைத் தெரியும்; அவர் ஒஹையோவைச் சேர்ந்தவர். அவர் மருத்துவரிடம் சென்றபோது, மருத்துவர் அவரிடம், “சாம், அடுத்த வாரம் ஆயத்தமாயிருங்கள். அறுவை சிகிச்சை

செய்து அந்த கல்லை வெளியே எடுத்து விடுகிறேன்” என்றார். அப்பொழுதிலிருந்து இன்னும் சில நாட்களில் என்பதாகும்.

அப்பொழுது அவர், “மருத்துவரே, அது கழிவு மூலம் வந்து விடாதா?” என்று கேட்டார்.

அதற்கு மருத்துவர், “அது முடியாது. அந்தக் கல் மிகவும் பெரியதாயிருக்கிறது” என்றார்.

76 எனவே மருத்துவர் அவரைக் காரில் கொண்டு போய் வீட்டில் சேர்த்தார். சாம் என்னை தொலைபேசியில் கூப்பிட்டு, “நீங்கள் வந்து எனக்காக ஜெபிக்க வேண்டும், சகோதரன் பிரான்ஹாமே” என்றார். இதற்காக அவர் ஏன் என்னை தொலைபேசியில் கூப்பிட வேண்டும்? நான் அவருக்காக ஜெபிக்கத் தொடங்கினேன்.

77 நான், “சாம், **கர்த்தர் உரைக்கிறதாவது**, அந்தக் கல் தானாகவே வெளியே வந்து விடும்” என்றேன்.

78 அடுத்த நாள் அவர் கல்லை மருத்துவரிடம் கொண்டு சென்றார். மருத்துவர், “திரு.கான்னலி, இது எப்படி நடந்ததென்று எனக்குப் புரியவேயில்லை” என்றார்.

79 அவர், “நான் தேவனுக்குள் ஒரு விசுவாசியாயிருக்கிறேன். அந்த கல் என்னிலிருந்து வெளியே வரும்படி தேவன் செய்தார்” என்றார். அந்த மருத்துவரால், அதை நம்ப முடியவில்லை. என் மனைவியின் பக்கவாட்டிலிருந்த அந்த பெரிய கட்டி மறைந்தபோது எப்படி மருத்துவரால் நம்ப முடியவில்லையோ, அதேவிதமாகவே. பாருங்கள், அதைக் குறித்து நீங்கள் அறிவீர்கள். எனவே அவர் சொன்னார்…

80 ஏறக்குறைய ஆறு மாதங்கள் கழித்து, கிட்டத்தட்ட அதாவது இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு முன்பு, சாம் கான்னலி ஒரு அபாயகரமான இருதயக் கோளாறினால் பாதிக்கப்பட்டார். அதன் பெயர் எனக்குத் தெரியவில்லை, இரத்தக் குழாய் சார்ந்த அல்லது ஏதோ ஒரு விதமான இருதய அடைப்பு அல்லது அப்படி ஏதோ ஒன்று. அது மிகவும் ஆபத்தானது…அது…நீங்கள் அதிலிருந்து மீள முடியாது என்று அவர்கள் கூறுகின்றனர். அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு அவருடைய இருதயத்தில் இரத்த ஓட்டம் அடைப்பட்டது, அவருடைய கால்கள் வீங்கிப்போய், அவருடைய கணுக்கால்கள் அவருடைய மூட்டுகளைக் காட்டிலும் பெரிதாகிவிட, அவருடைய இடுப்புவரை வீங்கிவிட்டது. எனவே அவர்கள் அவரை மருத்துவரிடம் கொண்டு சென்றனர். மருத்துவரோ, “அவரை சமாதனத்துடன் வீட்டுக்கு கொண்டு செல்லுங்கள், அல்லது மருத்துவமனையில் சேர்த்து விடுங்கள்” என்றார்.

சாம், “நான் மருத்துவமனைக்குப் போக விரும்பவில்லை” என்றார்.

மருத்துவர், “அவரை வீட்டுக்குக் கொண்டு சென்று படுக்க வையுங்கள். ஆறுமாத காலம் அவர் தலை, கை அல்லது, கால்,

எதையுமே அசைக்கக் கூடாது. அவர் எந்த நேரத்திலும் மரிக்கக் கூடும்” என்றார்.

81 சகோதரன் நார்மன் என்னைத் தொலைபேசியில் கூப்பிட்டார். அன்றிரவு நாங்கள் சகோதரர் சாமைக் காணச் சென்றோம். அவருக்காக நாங்கள் ஜெபித்தபோது, கர்த்தர் பேசினார்.

அடுத்த நாள் காலையில் சாம் மருத்துவரின் அலுவலகத்துக்குச் சென்று அவருடைய முன்னிலையில் நின்று, கட்டுப் போட்டிருந்த அவருடைய கால்களை அவிழ்த்து, “மருத்துவரே, என்னைப் பாருங்கள்” என்றார்.

மருத்துவர் அவருடைய மின் ஆற்றலினால் இருதயத் துடிப்பை அளக்கும் இயந்திரத்தில் பதிவு செய்து பர்த்துவிட்டு “எனக்கு இது புரியவேயில்லை. நீங்கள் மறுபடியும் வேலைக்குச் செல்லலாம்” என்று கூறிவிட்டு, “நீங்கள் எந்த சபையைச் சேர்ந்தவர்?” என்று கேட்டார்.

அதற்கு அவர், “நான் அந்த ஸ்தாபனங்களில் உள்ள எந்த சபையையும் சார்ந்தவனல்ல” என்று பதிலளித்தார்.

82 அப்பொழுது மருத்துவர், “எந்த ஒரு ஸ்தாபனத்தையும் சேராமல் நீங்கள் கிறிஸ்தவராக இருக்க முடியாதே, நீங்கள் ஏதாவதொரு ஸ்தாபனத்தை சேர்ந்திருக்க வேண்டுமே” என்றார். பாருங்கள், மருத்துவருக்கு தெரிந்திருந்ததோ அவ்வளவு தான். சாம் அவருக்கு ஒரு பைத்தியக்காரராக காணப்பட்டார். அவ்வாறே மருத்துவரும் அப்படிப்பட்ட ஒரு கேள்வியைக் கேட்டதனால் சாமுக்கு பைத்தியக்காரராகக் காணப்பட்டார்.

அதன் பின்னர் என்ன நேர்ந்தது? சாம் என்னிடம் வந்து, “சகோதரன் பிரான்ஹாமே, அத்தகைய காரியங்களை என்னிடம் சொல்லுகிற எவருக்கும் நான் என்ன பதில் கூற முடியும்?” என்று கேட்டார்.

83 அப்பொழுது நான், “அவர்களிடம் நீங்கள் ‘ஒரே ஒரு சபையை சேர்ந்திருப்பதாக’ கூறிவிடுங்கள். நீங்கள் அதில் சேர்வதில்லை. அது ஒரு ஸ்தாபனமல்ல. அதில் நீங்கள் பிறக்கின்றீர்கள்” என்றேன்.

84 ஆறு மாதங்களுக்கு முன்பு ஒரு ஸ்திரீ சகோதரி நார்மனின் மார்பின் மேல் சாய்ந்து கொண்டிருந்தாள். அவளுடைய பெயர் எனக்கு மறந்து விட்டது, ஏறக்குறைய முப்பது வயதுகொண்ட மிக அழகான பெண். அவளும் அவளுடைய கணவரும் பிரிந்திருந்தனர். அவளுக்கு இரத்தப் புற்றுநோய் பீடித்திருந்தது. அவள் நடக்க முடியாத அப்படிப்பட்ட ஒரு மோசமான நிலையில் இருந்தாள். அது மிகவும் மோசமடைந்து, மருத்துவர்கள் அவளைப் படுக்கையில் போட்டனர். மருத்துவர்கள் அவளுக்கு சிகிச்சையளித்து வந்து முடிவில், அவள் அடுத்த புதன் கிழமை வரைக்கும் உயிரோடிருப்பாள் என்றும், அன்றே மரித்துவிடுவாள் என்றும் கூறிவிட்டனர். திருமதி. நார்மன்

எப்படியோ அவளைப் படுக்கையிலிருந்து தூக்கி கொண்டு வந்து நாற்காலியில் உட்காரவைத்தாள். அந்த சிறிய பெண்மணி அங்கே உதவியின்றி அமரமுடியாதவளாய் இருந்தாள். முன்னும் பின்னுமாக ஆடிக்கொண்டிருந்தாள். அவள் சாம்பல் நிறமுள்ளவளாகக் கானப்பட்டாள். இரத்தப் புற்று நோயின் காரணமாக அவளுடைய தோல் மஞ்சள் நிறமாயிருந்தது.

நான் “சகோதரியே, என்னால் உனக்காக ஜெபிக்க முடியும்” என்றேன்.

அவள் பேச முயன்றபோது, கண்ணீர் கண்களிலிருந்து பெருகினது, அவள் கூறினதோ...

அப்பொழுது நான்—நான், “நீ கிறிஸ்தவளா?” என்று கேட்டேன்.

அதற்கு அவள், “நான் ஒரு மெதோடிஸ்டு” என்றாள்.

அப்பொழுது நான், “நீ கிறிஸ்தவளா என்று தானே நான்—நான் கேட்டேன்” என்றேன்.

அதற்கு அவள், “நான் கிறிஸ்தவ சபையைச் சேர்ந்தவளா என்றா கேட்கிறீர்கள்?” என்றாள்.

85 அப்பொழுது நான், “இல்லை, அம்மணி, நீ தேவனுடைய ஆவியினால் பிறந்து, கர்த்தராகிய இயேசுவை நேசிக்கிறாயா என்று தான் கேட்கிறேன்” என்றேன்.

அதற்கு அவள், “பாருங்கள், நான் எப்பொழுதுமே ஒரு ஸ்தாபனத்தை சேர்ந்தவள்” என்றாள்.

86 அப்பொழுது நான், “தேவன் உன்னை உயிரோடு வைத்தால், நீ என்னிடம் மறுபடியும் வந்து கர்த்தருடைய வழியை இன்னும் தெளிவாக உனக்கு காண்பிக்க எனக்குத் தருணம் அளிப்பாயென்று வாக்குக்கொடுப்பாயா?” என்றேன்.

அதற்கு அவள், “நான் தேவனுக்கு எதையும் வாக்களிப்பேன். அவர் என் உயிரைக் காப்பாற்றினால், நான் அவரை சேவிப்பேன்” என்றாள்.

87 அப்பொழுது எனக்கு ஒரு தரிசனம் உண்டாகி “**கர்த்தர் உரைக்கிறதாவது**. மரணத்துக்காக ஆயத்தப்படாதே. நீ நாளை கழித்து மரிப்பதற்காக ஆயத்தம் பண்ணியுள்ளவை அனைத்தையும் கிழித்தெறிந்து விடு” என்று உரைக்கப்பட்டது. அது திங்கட் கிழமையாயிருந்தது, அவள் புதன் கிழமை மரிக்க வேண்டியவளாயிருந்தாள். “நீ மரிக்கப் போவதில்லை” என்றேன்.

கடந்த ஞாயிறன்று, இந்த ஞாயிறுக்கு முந்தின வாரம், நான் அவளுடன் அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தேன். அவளுடைய எடையில் முப்பதுக்கும் சற்று கூடுதலான பவுண்டு கூடினது. அவள் உடலில் இரத்தப் புற்று நோய் சிறிதளவும் கூட எங்குமே காணப்படவில்லை என்று மருத்துவர் கூறினார். அவள் கர்த்தருடைய வழியை அறிய விரும்பினாள், நான்

அவளை நீர்ப்பாசன குளத்தில் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறும்படியாக அனுப்பினேன். அது கர்த்தருடைய வழியாயிருந்தது. அவள் ஒரு பைத்தியமாக இருக்கலாம், ஆனால் “நான் உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்.”

88 இங்கு ஒலிநாடா பதிவு செய்யும் பையன் லியோ மெர்சியர் வீட்டுக்கு விஜயம் செய்திருந்தேன். அவர் ஒரு இரும்பு இணைப்பு வண்டியில் குடியிருந்தார். அங்கு சிலருக்காக நான் ஜெபித்துக்கொண்டிருந்தேன். லோகார் என்னும் பெயருடைய பெண்ணுக்கும் ஜெபித்தேன். அது தான் அவள் பெயர் என்று நான் நினைக்கிறேன். அவளுக்கு ஏற்கனவே பதினான்கு புற்று நோய் அறுவை சிகிச்சை நடந்திருந்தது. மருத்துவர்கள் அவள் மரித்து போவாள் என்று கூறி கைவிட்டு விட்டனர். அவளுக்காக நான் ஜெபத்தை ஏறெடுத்து, அவள் மரிப்பதில்லை என்றும், அவள் உயிர் வாழ்வாள் என்றும் கூறினேன். அவள் உடலில் சிறிதளவு புற்று நோயும் கூட எங்கும் காணப்படவில்லை. அதன் விளைவாக அவளுடைய குடும்பத்தில் இருபத்தெட்டு பேர் இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்றனர். ஒருக்கால் ஒரு பைத்தியமாக இருக்கலாம், ஆனால் அது வரக்கூடிய எல்லாரையும் அவரிடம் இழுத்துக் கொள்கிறது. அது வார்த்தையுடன் மறையினால் இணைக்கப்பட்டுள்ளது. நான் என்ன கூறுகிறேன் என்று புரிகிறதா?

89 நேற்றைய முந்தின நாள் எனக்கு ஒரு கடிதம் வந்தது. அது அங்கே என்னுடைய கோப்பில் உள்ளது. சென்ற இலையுதிர் காலத்தின் போது நான் வேட்டை பயணத்தை மேற்கொண்டபோது… இல்லை, அது ஓராண்டுக்கு முன்பு வசந்த காலத்தின் போதாகும். ஆஸ்கர் என்னும் பெயர் கொண்ட சிகப்பு இந்திய பையனுடன் நாங்கள் நெடுஞ்சாலையில் வேட்டைக்கு சென்றிருந்தோம். அங்கு தான் கர்த்தருடைய தூதன் அந்த கலைமானையும், வெள்ளி முனை கொண்ட சாம்பல் நிற கரடியையும் அங்கு தோன்றப்பண்ணுவதாக கூறியிருந்தார் என்று நான் உங்களிடம் கூறியிருந்தேன். அது உங்கள் எல்லோருக்கும் ஞாபகமிருக்கும். நான் உள்ளே வந்தபோது அந்த பையன்…கடந்த வசந்த காலத்தின்போது, அவன் கூடாரத்துக்குள் வந்தான். சகோதரர் பட் அவர்கள் உண்பதற்கு முன்பு என்னை ஜெபம் செய்யக் கேட்டுக் கொண்டபோது, (இந்த பையன் கையுறைகளை அப்பொழுது கழற்றி வைத்திருந்தான். அவன் குதிரை சவாரி செய்பவன்.) அவன் கையுறைகளைப் போட்டுக்கொண்டு புறப்பட ஆயத்தமானான். அவன் ஒரு கத்தோலிக்கனாயிருந்தான். அவன் ஜெபத்துடன் எவ்வித தொடர்பும் கொள்ள பிரியப்படவில்லை.

90 சென்ற இலையுதிர் காலத்தில் அவன்…அவனுடைய தாய் மாரடைப்பால் மரணத் தருவாயிலிருந்தபோது, அவன் என்னிடம் வந்து என் அருகில் நின்று, “நீங்கள் வந்து என் தாய்க்கு ஜெபம் செய்யமாட்டீர்களா?” என்று கேட்டான். நான் இந்தியர்கள் வசிக்கும்

அங்குள்ள அந்த குடிசையை அடைந்தேன். அவர்கள் எல்லோரும் அவனுடைய தாயைச் சுற்றிலும் இருந்தனர். அவள் மரித்துக் கொண்டிருந்தாள், அவளுக்கு ஒரு வார்த்தை கூட ஆங்கிலத்தில் பேசத் தெரியாது. அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்து, ஒரு மொழி மொழிபெயர்பாளர் மூலம் என்ன சம்பவித்திருந்தது என்றும், அது என்னவாயிருந்தும் என்றும் கூறினார். அவளுடைய பெயரையும் கூட கூறி, அவள் என்னவாயிருந்தான் என்பதை எடுத்துக் கூறி, அவள் எந்த மரபிலிருந்து வந்தவள் என்றும், என்ன நடக்குமென்றும் கூறினார். அவன் தாய் உடனே குணமடைந்தாள்.

91 அடுத்த நாள் அவர்களைக் காண நான் சென்றிருந்தேன். ஒரு ஆட்டிற்காக நான் நாற்பது மைல் காரோட்டி செல்ல வேண்டியதாயிருந்தது. அவர்கள் எல்லோரும் அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தனர். அவள் கடமான் என்ற மானின் இறைச்சியை உலர்த்துவதற்காக குதிரையில் மேல் ஏறிக் கொண்டிருந்தாள், நான் அவளிடம், “லூயிஸ், சென்ற இரவு நான் ஜெபித்தபோது, நான், ‘பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே’ என்று கூறினேன். அது கத்தோலிக்கர்களின் ஜெபமாதலால், நீங்கள் எல்லோரும் அந்த ஜெபத்தைக் கூறினீர்கள். நீங்கள் அதைக் கூறும்படி நான் விட்டுவிட்டேன். இப்பொழுது நான் தேவனுக்கு நன்றி செலுத்தப் போகின்றேன். நாங்கள் ஜெபங்களை ஒப்பிக்கிறதில்லை. நாங்கள் ஜெபிக்கிறோம்” என்றேன்.

92 அவள், “நாங்கள் இப்பொழுது கத்தோலிக்கர்கள் அல்ல. நீங்கள் விசுவாசிப்பது போலவே நாங்களும் விசுவாசிக்கின்றோம். எங்கள் எல்லோரையும் நீங்கள் கொண்டு சென்று, நீங்கள் ஞானஸ்நானம் கொடுக்கும் விதத்தில் எங்களுக்கும் ஞானஸ்நானம் கொடுங்கள். நாங்கள் பரிசுத்த ஆவியைப் பெற விரும்புகிறோம்” என்றாள்.

93 திரும்பி வரும்போது…அந்த பையன் அநேக மாதங்களுக்கு முன்னர் தொலைந்து போயிருந்த தன்னுடைய குதிரைகளை கண்டுபிடிக்க முடியவில்லை, வழிகாட்டி அவனிடம் “ஆஸ்கர், நீ குதிரைகளை அப்படி அவிழ்த்துவிட்டிருக்கக் கூடாதென்று உனக்கு தெரிந்திருக்க வேண்டும். சாம்பல் நிறமுள்ள கரடிகள் இந்நேரம் அவைகளை தின்றுவிட்டிருக்கும்” என்று கடிந்து கூறிக்கொண்டிருந்தான்.

அவன் எனக்கு அருகே தொடர்ந்து நின்று கொண்டிருந்தான். அப்பொழுது ஓர் இரவு அவன் என்னிடம், “உங்களிடம் ஒன்றைக் கேட்கலாமா?” என்று கேட்டான்.

அதற்கு நான், “கேள்” என்று கூறினேன்.

அப்பொழுது அவன், “சகோதரர் பிரான்ஹாமே, தேவன் என் குதிரைகளைத் திரும்பத் தரும்படி அவரிடம் ஜெபியுங்கள்” என்றான்.

அதற்கு நான் “கரடிகள் அவைகளைத் தின்றுவிட்டிருக்கும் என்று பட் அவர்கள் கூறுகிறாரே” என்றேன்.

அப்பொழுது அவன், “சகோதரன் பிரான்ஹாமே, தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள். தேவன் ஆஸ்கருக்கு அவனுடைய குதிரைகளை திரும்ப அளிப்பார்” என்றான்.

அதற்கு நான், “ஆஸ்கர், நீ அதை விசுவாசிக்கிறாயா?” என்று கேட்டேன்.

அப்பொழுது அவன், “நான் விசுவாசிக்கிறேன். என் தாயை குணமாக்கின தேவன், கரடி எங்கே இருந்தது என்றும், வேட்டைப் பொருள் எங்கே இருந்தது என்று உங்களிடம் கூற முடிந்த தேவனுக்கு, வேட்டை பொருள் எங்குள்ளது என்று கூற முடிந்த அந்த தேவனுக்கு, என் குதிரைகள் எங்குள்ளன என்றும் கூற முடியும்” என்றான். பார்த்தீர்களா?

94 ஓராண்டிற்கு முன்பு நான் ஃப்பிரட் சாத்மானுடனும், அவர் இன்றிரவு இருக்கிறார், என் மகன் பில்லி பாலுடனும் நின்று கொண்டிருந்தபோது, பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்தார். நான், “ஆஸ்கர், நீ உன் குதிரைகளைக் கண்டு பிடிப்பாய். அவைகள் பனிக்கட்டியில் நின்று கொண்டிருக்கும்” என்றேன்.

இதோ போன வாரம் அவன் எழுதின கடிதம் என் வசம் உள்ளது. அது எனக்கு வெள்ளியன்று கிடைத்தது. இங்கு வந்தது. அது இப்பொழுது அந்த கோப்பில் உள்ளது. அவன், “சகோதரர் பிரான்ஹாமே, ஆஸ்கர் குதிரைகளை பனிக்கட்டியில் நின்று கொண்டிருக்கக் கண்டான்” என்று எழுதியிருந்தான்.

95 அவை எப்படி உயிரோடிருந்தன என்று யாருக்குமே தெரியவில்லை. அந்தப் பையன்...ஆண்டின் இந்த நேரத்தில், ஜூன் மாதத்தில், பனிக்கட்டி இருபது அல்லது முப்பது அடி உறைந்து கிடக்கும். குளிர்காலத்தில் அவைகள் எப்படி அந்த மலைக் கணவாயில் தங்கின? ஆஸ்கர் பனிக்கட்டி காலணிகளை அணிந்துதான் அங்கு செல்லமுடியும். ஆனால் அவன் தன்னுடைய குதிரைகளுக்கு பனிக்கட்டி காலணிகளை அணிவிக்க முடியாது. ஆனால் அவன் தேவனுடைய வார்த்தை உரைத்தபடி அவைகளை அங்கு கண்டான். அது ஒருக்கால் பைத்தியக்காரத்தனமாக தென்படலாம். ஒரு முறை அதை விசுவாசித்துப் பாருங்களேன், உங்கள் அச்சாணி மறைகள் எப்படியுள்ளன என்பதையே அது பொறுத்தது.

96 இப்பொழுது, அது ஒரு ஸ்தாபன மறையோடு இணையாது. அது வார்த்தை என்ற மறையோடு மாத்திரமே இணையும். ஆனால் அந்த வார்த்தையை விசுவாசிக்கிற சில ஜனங்கள் இந்த உலகில் உண்டு. இங்கிருந்து மணவாட்டியை கொண்டு சென்று மணவாளனோடு மறையேற்றப்பட்டு இணைக்க ஒரு திருகு ஆணி தேவை. ஏனெனில் மணவாளனும் மணவாட்டியும் ஒன்றாயிருக்கின்றனர்.

தேவன் ஒருவரே, வார்த்தையே தேவன்! அது வார்த்தை என்ற மறையினால் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். அப்பொழுது அது மணவாட்டியை அந்த ஸ்தாபனங்களிலிருந்து வெளியே இழுத்துவிடும்.

97 ஆம், அவர் என்னில் குற்றம் கண்டு பிடிக்கப் பார்த்தார். உங்களுக்கு தெரியுமா, இன்று காலை தேவன் தோல்களுக்கு பின்னால், மனிதனின் தோலுக்குப் பின்னால் மறைந்து கொண்டிருத்தலைக் குறித்துப் பேசினது எனக்கு ஞாபகம் வருகிறது.

98 ஒரு சிறு கதையோடு நான் முடிக்கப்போகிறேன். இப்பொழுது நான் உங்களை கிட்டத்தட்ட நாற்பத்தைந்து நிமிடங்கள் பிடித்து வைத்துக் கொண்டதற்காக வருந்துகிறேன். அது ஒரு வீடு, கிறிஸ்தவ வீடு. அங்கு ஒரு…இதை நான் குற்றம் கண்டுபிடிக்கப் பார்த்த அவரிடம் கூறினேன். அந்த வீட்டில்…அவர்கள் தேவன் பேரில் விசுவாசமுள்ளவர்களாய் இருந்தார்கள். அவர்களுக்கு ஒரு சிறு பையன் இருந்தான். ஆனால் அவன் ஒரு புயலில் மரண திகில் அடைந்திருந்தான். மின்னலானது, ஓ, அவனுக்கு மரண திகிலை ஏற்படுத்தியிருந்தது. மின்னல் அடிக்கும்போது, அவன் மேசையின் கீழ் எங்காவது ஒளிந்து கொள்வான்.

ஒரு இரவு அவர்கள் வசித்த பண்ணையில் பயங்கரமான புயல் வீசியது. நள்ளிரவின்போது, மரங்கள் காற்றில் அசைந்தன, மின்னல் பயங்கரமாக அடித்தது. அப்பொழுது அம்மா மகனிடம், “மகனே, மாடியில் சென்று படுத்துக் கொள்” என்றாள். தொடர்ந்து அவள், “பயப்படாதே, அங்கே மேலேறிப் போ” என்று கூறினாள்.

99 எனவே சிறுவன் இரவு உடைகளை அணிந்து, திரும்பிப் பார்த்து அழுதுகொண்டே படிக்கட்டுகளில் ஏறி மாடியை அடைந்து, படுக்கையில் படுத்து, தலையைப் போர்வையினால் மூடி உறங்க முயன்றான். அவனால் உறங்க முடியவில்லை, ஏனென்றால் ஜன்னலின் வழியாக மின்னல் உள்ளே வந்து கொண்டிருந்தது. எனவே அவன், “ஓ அம்மா, இங்கு வந்து என்னோடு படுத்து உறங்குங்கள்” என்றான்.

அவளோ, “மகனே, எதுவுமே உன்னை தொல்லைப்படுத்தப் போகிறதில்லை. அந்த மின்னல் உன்னை சேதப்படுத்த முடியாது” என்றாள்.

அவன், “ஆனாலும் அம்மா, இங்கு வந்து என்னோடு படுத்து உறங்குங்கள்” என்றான்.

100 எனவே அம்மா படிக்கட்டுகளில் ஏறி மாடிக்குச் சென்று மகனுடன் படுத்துக்கொண்டாள். அவள், “மகனே, என் குட்டி மகனே, அம்மா உன்னிடம் ஒன்றைக் கூற விரும்புகிறேன். மகனே, நாம் ஒரு கிறிஸ்தவக் குடும்பம். நாம் தேவன் பேரில் விசுவாசம் கொண்டவர்கள். தேவன் நம்மை புயலில் காப்பாற்றுகிறார் என்று நாம் விசுவாசிக்கிறோம். நாம் அதை விசுவாசிக்கிறோம்.

தேவன் தமக்குச் சொந்தமானவர்களைக் காக்கிறார் என்று நாம் விசுவாசிக்கிறோம். மகனே, நீயும் அதை அப்படியே விசுவாசிக்க வேண்டும். நீ பயப்படக்கூடாது. தேவன் நம்மோடு இருக்கிறார். அவர் நம்மைக் காப்பார்" என்றாள்.

101 சிறுவனோ சில நிமிடங்கள் ஏமாற்றத்திற்குள்ளாகி, "அம்மா, நானும் கூட அதை விசுவாசிக்கிறேன். ஆனால் அந்த மின்னல் ஜன்னலுக்கு அருகில் வரும்போது, தேவன் அதற்கு தோலை உடுத்துவித்திருந்தால் நலமாயிருக்கும் என்று எண்ணத் தோன்றுகிறது" என்றான்.

வயது வந்தவர்களாகிய நம்மில் அநேகரும் கூட அதேக் காரியத்தையே எண்ணுகிறோம் என்று நான் நினைக்கிறேன். தேவன், அதன் மீது தோலை உடுத்தியிருந்தால் நலமாயிருக்குமே! [ஒலி நாடாவில் காலி இடம்—ஆசி.] தேவன் அதன் மேல் தோலை உடுத்தியிருந்தால் நலமாயிருக்குமே! அது உலகத்திற்கு ஒரு பைத்தியம் போன்று தென்படலாம். ஆனால் அது எல்லாரையும் அவரிடம் இழுத்துக் கொள்கிறது.

நாம் ஜெபம் செய்வோமாக.

102 பரலோகப் பிதாவே, அனுபவமுள்ள இந்த சிறு சம்பவங்கள், அவைகள் ஒரு காரணத்துக்காகவே சில நேரங்களில் சம்பவிக்கின்றன. அது மூர்க்கத்தனமானதாக உள்ளது போன்று இருந்தாலும், அதே சமயத்தில் நாங்கள் அது சம்பவித்ததற்கான காரணத்தை புரிந்து கொள்கிறோம். தேவன் தாமே எங்களுக்குள் வாசம் செய்ய முடிகிறதற்காக, கர்த்தாவே, இன்றிரவு நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்களுடைய பாவ பரிகாரத்துக்காக நீதிபரராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டதற்காக நாங்கள் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். தேவத்துவத்தின் பரிபூரணம் அவருக்குள் சரீரப்பிரகாரமாக வாசம் செய்தது. அவர் தம்முடைய விலையேறப்பெற்ற ஜீவனை ஈந்தார், அது பலவந்தமாக அவரிடத்திலிருந்து எடுக்கப்படவில்லை. ஆனால் அவர் அதை மனப்பூர்வமாக ஈந்தருளினார். நாங்கள் அவருடைய பிரசன்னத்தின் பரிபூரணத்தில், அவர் வாழ்ந்த ஷெகினா மகிமையில் அவரை அனுபவித்து மகிழ, அந்த இரத்தத்தினால் எங்களுடைய ஆத்துமாக்கள் பரிசுத்தமாக்கப்பட்டு, அந்த மகத்தான பரிசுத்த ஆவியானவர் தாமே எங்களுக்குள்ளாக ஜீவிக்கும்படியாக அப்படிச் செய்தார். கர்த்தாவே நாங்கள் தேவையுள்ளோருக்கு போதகர்கள், தீர்க்கதரிசிகள் போன்றவர்களாகின்றோம். அவை தேவனுடைய வரங்கள், தேவன் தாமே இந்த நவீன காலத்தில் தம்முடைய மகத்தான வரங்களை வெளிப்படுத்தி பிரகாசிக்கச் செய்கிறார்.

103 கர்த்தாவே, ஒரு பைத்தியமாயிருப்பது என்ற வார்த்தை பக்குவப்படாத வார்த்தையில் வெளிப்படுத்துவதாகும். உலகமானது ஒரு கரடு முரடான பாதையில் செல்வதுபோன்று

சபையானது இன்றைக்கு உள்ளபடியால் புதிய சபைகளை, புதிய ஸ்தாபனங்களை சேர்ந்து கொள்ள வேண்டும் என்ற கருத்தே நிலவி வருகிறதை நாங்கள் அறிவோம். எனவே வார்த்தையோடு வருகிற ஒரு மனிதன் ஒரு பைத்தியமாக, பித்துபிடித்த நபராகவே கருதப்படுகிறான். ஒரு ஆசாரியனாக, ஒரு வேத பண்டிதனாக இருக்கும்படி பயிற்றுவிக்கப்பட்ட மகத்தான அப்போஸ்தலனாகிய பவுல், தான் தேவனுடைய மகிமைக்காக அதே சமயத்தில் ஒரு பைத்தியமானதாக கூறினான். ஜனங்கள் தன்னுடைய மெருகேற்றப்பட்ட கல்வியறிவுகொண்ட வார்த்தைகளை கேட்கக் கூடாதபடிக்கே அவன் கல்வியை துறந்துவிட்டான். அவன் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ள வார்த்தைகளினால் வரவில்லையென்று கூறினான். அப்படி வந்திருந்தால் அவர்களுடைய விசுவாசம் அப்படிப்பட்ட காரியத்தில் நிலைத்திருந்திருக்குமே. “நான் போனபின்பு மந்தையைத் தப்பிவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்” என்று அவன் தீர்க்கதரிசனம் உரைத்தது போலவே இன்றைக்கு சபையானது எவ்வளவாய் அந்நிலைக்கு திரும்பிவிட்டுள்ளது. ஆனால், அவர்களுடைய விசுவாசம் தேவனில் நிலைத்திருக்கும்படி பவுல், “பரிசுத்த ஆவியின் வெளிப்படுத்தல்களிலும் வல்லமையிலும்” அவர்களிடத்தில் வந்ததாகக் கூறினான். பிதாவே, இயேசுவை அறிந்து கொள்ள இந்த உலகத்திற்கு அவன் ஒரு பைத்தியமானான்.

104 கர்த்தாவே, இன்றைக்கு நாங்களும் அந்தவிதமாகவே செய்கிறோம். இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கும் மக்கள் பைத்தியக்காரராக எண்ணப்படுகின்றனர், ஏனென்றால் அவர்களோ தங்கள் சுகத்திற்காக, தங்கள் நித்திய ஸ்தலத்திற்க்காக தேவனை நம்ப ஆயத்தமாயுள்ளனர். அவர்கள் அவரை ஆராதிப்பதற்கென தங்கள் புகழையும் பணயம் வைத்துள்ளனர். அவருக்கு நன்றி செலுத்தி, அவரை ஸ்தோத்தரித்து, அவர்களுடைய ஆவிக்கு சுதந்தரத்தையளித்து தேவனை வழிபடுகின்றனர். அவர்கள் பைத்தியமெனக் கருதப்படுகின்றனர். ஆனால் நீரோ, “தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது” நாங்கள் பைத்தியமாயிருந்தால், “மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது என்றும், ஏனென்றால் மனிதன் சுய ஞானத்தினால் தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே இரட்சிக்கப்படக் கூடியவர்களை இரட்சிக்க தேவனுக்கு பிரியமாயிற்று” என்று கூறினீர். தேவனே இந்த வார்த்தையின் மகத்தான ஆக்கியோன் இன்றிரவு வந்து, வியாதியஸ்தர்களை சுகப்படுத்தி, இழந்து போனவர்களை இரட்சிக்க வேண்டுமென்று நாங்கள் ஜெபிக்கிறோம். நாங்கள் இதை இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

105 இன்றைக்கு நான் கூறியுள்ளதைக் குறித்து நீங்கள் குழப்பமடையக் கூடாதென்று எண்ணி, நான் தேவனை ஒரு

காரியத்திற்கு ஒப்பிடுகிறேன்; நித்தியமான தேவன் ஒரு பெரிய வைரம்.

வைரம் ஆப்பிரிக்காவின் சுரங்கத்திலுள்ள நீல கற்களிலிருந்து வெளியே கொண்டு வரப்படும்போது, நான் அந்த மகத்தான வைரக்கற்களை கவனித்துப் பார்க்கும்படி அந்த சுரங்கத்துக்கு சென்று, அவர்கள் எப்படி கற்களை உடைக்கும் இயந்திரத்தில் போட்டு கற்களை உடைத்து வைரத்தை வெளியே எடுக்கின்றனர் என்பதை கண்டிருக்கிறேன், அந்த பெரிய நீல வைரங்களும், கறுப்பு வைரங்களும் வெளியே வருகின்றன. அந்த நிலையில் அவைகளுக்கு வடிவம் எதுவும் இல்லை. அவை ஒரு பெரிய கல்லாய் மாத்திரமே உள்ளன. உண்மையாகவே அவைகளுக்குள் அந்த நேரத்தில் எந்த அக்கினியுமே இல்லை. அவைகள் வெறுமனே ஒரு வைரக் கல்லாய், உருண்டையாய், வழுவழுப்பாய் மாத்திரமே உள்ளன. அவைகளில் பெரும்பாலும் அவ்வாறே உள்ளன. ஆனால் அந்த வைரம் வெட்டப்பட வேண்டும். இந்த வைரம் பட்டை தீட்டப்படாமல் வைத்திருப்பது சட்ட விரோதமானது. அவை பட்டைத் தீட்டப்பட வேண்டும். அதன் பின்னர் அவைகளை நீங்கள் எங்கே வாங்கினீர்கள் என்பதற்கு உங்களிடம் ரசீது இருக்க வேண்டும், ஏனெனில் அவை லட்சக்கணக்கான டாலர்கள் விலைமதிப்புள்ளவை.

நான் தேவனை அந்த வைரத்துக்கு ஒப்பிடுகிறேன்.

106 இப்பொழுது ஒரு வைரத்துக்குள் இருக்கும் பிரகாசம் ஜொலிக்க வேண்டும் என்பதற்காக அது பட்டை தீட்டப்படுகிறது. அது எல்லா சிறு வடிவங்களிலும் முக்கோண வடிவில் பட்டை தீட்டப்பட வேண்டும். வைரத்தை முக்கோண வடிவு பட்டைகளில் தீட்டும் போது, அதின் மேல் ஒளி விழும்போது, அது ஏழு நிறங்களைத் தரும், பாருங்கள், ஏழு வர்ணங்களை உண்டாக்குகிறது. பாருங்கள்.

107 இப்பொழுது கவனியுங்கள், "தேவன் நம்முடைய மீறுதல்களினிமித்தம் காயப்பட்டார், நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்." பாருங்கள், அவர் வரங்களை சபைக்கு அவரிடத்திலிருந்து பிரதிபலிக்க வேண்டும் என்பதற்காக, அந்த பெரிய வைரம் வெட்டப்பட்டு நொறுக்கப்பட்டது.

அது ஒளியல்ல, ஏனெனில் சூரிய ஒளி அதன்மேல் படாதிருக்கும்போது அது எங்கிருந்து வெட்டப்பட்டதோ, அங்கு திரும்பிச் செல்ல வேண்டும்.

அது வெட்டப்பட்ட இடத்தில் கிடைக்கும் சிறு துணுக்குகளும் கூட அழிக்கப்படுவதில்லை. அவை உபயோகப்படுகின்றன. அவை ஒலியமை வடிவ இயந்திர ஊசிகளாக செய்யப்படுகின்றன. அந்த வைரத்திலிருந்து வெட்டப்பட்ட துணுக்கு ஊசிகள்,

பதிவு செய்யப்பட்ட இசைத்தட்டிலிருந்து இசையைத் தோன்றச் செய்கின்றன.

108 நான் என்ன பொருட்படுத்திக் கூறுகிறேன் என்பதை நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன். அது போன்று கிறிஸ்துவிலிருந்து உண்டான துணுக்கை, கிறிஸ்துவிலிருந்து வந்த வரத்தை, வேதாகமத்தின் மேல் வைக்கும்போது, அது விசுவாசிக்கு மறைக்கப்பட்டுள்ள தேவனுடைய இரகசியங்களை வெளிப்படுத்தித் தருகிறது. அவர் இருதயத்தின் இரகசியங்களை அறிந்திருக்கிறார். அவர் ஒவ்வொரு நபரையும் அறிந்திருக்கிறார். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா?

அந்த வைரத் துணுக்கு "நான் யாரென்று நீ பார்த்தாயா?" என்று கூறாது. அது எதிலிருந்து வந்ததோ அது தான் முக்கியம் வாய்ந்தது. ஒரு வைரத்துணுக்கும் வைரம் தான், ஏனெனில் அது வைரத்திலிருந்து தோன்றினது.

109 அந்தவிதமாகத்தான் ஆவியின் வரங்களும்…ஒரு நபருக்கு உள்ளன. அது வைரத்தின் பாகமாயுள்ளது. அது கீழே அனுப்பப்பட்டு, ஒரு வரமாக விளங்கி, வியாக்கியானமுரைத்து, போதித்து, கற்பிக்கிறது. ஆவியின் வரங்கள் ஐந்தாகும்: அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், போதகர்கள், மேய்ப்பர்கள், சுவிசேஷகர்கள். இவர்கள் அனைவரும் கிறிஸ்துவின் சரீரம் சீர்பொருந்துவதற்காக உள்ளவர்கள். போதகர்களும், மேய்ப்பர்களும் இருப்பது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாக தீர்க்கதரிசிகளும் இருக்க வேண்டும். நாம் அதை அறிவோம்.

110 கடைசி காலத்தில் தேவன் தெரிந்து கொள்ளப்பட்ட வித்துக்களாகிய தமது ஜனங்களின் மத்தியில் தீர்க்கதரிசியின் ரூபத்தில் வேதாகமத்தின்படி வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று நாம் விசுவாசிக்கிறோம். அது சரியாக வார்த்தையோடிருக்க வேண்டும். அந்த மனிதன் தேவன் அல்ல, ஆனால் அந்த வரம் தேவனாயுள்ளது. புரிகிறதா? அதுதான் ஒலித்தட்டு அமைவின் ஊசி.

இப்பொழுது ஒரு குண்டூசி அந்த ஒலித்தட்டில் இயங்காது. இப்பொழுது ஒரு வழக்கமான தையல் ஊசியானது, இசைத்தட்டிலிருந்து இசையை எழும்பாது. ஆனால் வைரத்தினால் ஆன ஊசி மாத்திரமே அதற்கு சிறந்தது. அது மாத்திரமே தெளிவாக இசையைத் தோன்றச் செய்கிறது, கூர்மையாக்கப்பட்ட ஒரு வைர ஊசி.

111 தேவன் தாமே இன்றிரவு…உங்கள் வாழ்க்கை என்னும் இசைத்தட்டில், உங்களுக்கு என்ன கோளாறு இருந்தாலும், நீங்கள் தேவனிடமிருந்து எதை வாஞ்சித்தாலும், தமது கரங்களில் இசைத்தட்டின் ஊசியை ஏந்திக் கொண்டிருக்கும் அந்த பெரிய எஜமான் தாமே, உங்கள் வாழ்க்கை என்னும் இசைத்தட்டின் மேல்

அந்த ஊசியை வைத்து, நீங்கள் எதற்காக இங்கு வந்திருக்கிறீர்கள் என்றும், உங்களுக்கு என்ன தேவை என்றும் எங்களுக்கு வெளிப்படுத்தித் தருவாராக. அப்பொழுது அவர் இங்கிருக்கிறார் என்று நாம் அறிந்துகொள்வோம்.

112 பரலோகப் பிதாவே, இந்த ஜெப வரிசையை நான் துவங்கும் முன்பு நீர் அதை அருளுவீரா? இதைச் செய்ய வேண்டும் என்ற நோக்கமல்ல, ஆனால் ஜனங்கள் அதை அறிந்து கொள்ளும்படியாக நீர் அதை அருளுவீரா? ஜெபம் ஏறெடுக்கப்படுவதற்காக அந்நியர்கள் இங்கு இருக்கலாம். நான் அவர்களை அறியேன். ஆனால் நீர் அறிவீர். பவுல், “நீங்கள் அந்நிய பாஷைகளில் பேசி அதற்கு அர்த்தம் உரைக்காமல் போனால், அப்பொழுது ஜனங்கள், உங்களை பைத்தியம் பிடித்தவர்கள் என்று சொல்வார்கள். ஆனால் ஒருவன் தீர்க்கதரிசனம் உரைத்து இருதயத்திலுள்ள இரகசியத்தை வெளிப்படுத்தினால், அவர்கள் ‘உண்மையில் தேவன் உங்களோடு கூட இருக்கிறார்’ என்பார்கள்” என்று கூறினான். தேவனே தாமதமான இந்நேரத்தில் மறுபடியும் அவ்வாறே நடக்கட்டும். அதை நீர் வாக்களித்திருக்கிறீர், அது அவ்வண்ணமே இருக்கும். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். ஆமென்.

113 இப்பொழுது, இன்றிரவு இங்கு எத்தனை பேர் சுகவீனமான ஜனங்களாய் உள்ளனர் என்று நான் எண்ணிப் பார்க்கிறேன் அல்லது பில்லி ஜெப அட்டைகளை கொடுத்தானா…? ஜெப அட்டைகள கொடுக்கப்பட்டனவா? [சகோதரர்கள், “ஆம்” என்கின்றனர்.—ஆசி.] ஜெப அட்டைகள் கொடுக்கப்பட்டுள்ளது. பாருங்கள், வியாதியஸ்தர் ஒவ்வொருவரும் ஜெப அட்டையை பெற்றுக் கொண்டனர் என்று நான் நினைக்கிறேன். ஆனால் அதில் நீங்கள் என்ன எழுதினீர்கள் என்று எனக்குத் தெரியாது. அவன் வெறுமென அட்டையை மாத்திரம் கொடுத்தான் என்று நான் நினைக்கிறேன். உங்களுடைய தேவையை நீங்கள் அதில் எழுதுங்கள். அவ்வளவு தானே? ஜெப அட்டையை மாத்திரம் பெற்றுக் கொண்டவர்கள் உங்கள் தேவை என்னவாயிருந்தாலும் அதில் எழுதுங்கள்.

114 நான் உங்களை அறியேன். நான் உங்களை அறியேன் என்பதை இங்கே எத்தனை பேர் அறிவீர்கள்? அதே சமயத்தில் நீங்கள் சுகவீனமாயிருக்கிறீர்கள், இன்று உங்களில் எத்தனை பேர், “‘தோல்களின் பின்னால் தேவன், மனித தோலின் பின்னால் தேவன் தம்மை திரைமறைத்துக் கொண்டிருக்கிறார்’ என்று நீர் கூறினதை நான் கேட்டிருக்கிறேன்” என்று கூறுவீர்கள்? ஆனால் நீங்கள் ஆவிக்குரிய கண்களைப் பெற்றிருந்தால், அவைகளைத் திறந்து அவரைக் காண முடியும், அதாவது அவர் யாரென்று நீங்கள் காணமுடியும். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்கள். இயேசு, “நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும்

பெரிய கிரியைகளையும் செய்வான்” என்று கூறினார். இப்பொழுது நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடு விசுவாசிப்பீர்களேயானால் நலமாயிருக்குமே!

115 இங்கே வியாதியாயிருந்து, உங்களை எனக்குத் தெரியாதென்று அறிந்திருந்து உங்களுடைய கோளாறு என்னவென்று அறிந்திருக்கிறவர்கள் எத்தனை பேர்? அப்படியே கரங்களையுயர்த்தி, “நான் வியாதியாயிருக்கிறேன், எனக்குத் தேவையுள்ளது” என்று கூறுங்கள். எத்தனை பேர் தங்கள் இருதயத்தில் வாஞ்சைகளை உடையவர்கள், வியாதியாயிராமல் வாஞ்சையாயிருப்பவர்கள்? …நான் என்ன…நீங்கள் அறிவீர்கள். சரி, தங்களுடைய கரத்தையுயர்த்தாதவர் யாரையுமே நான் காணவில்லை. இப்பொழுது, எனக்குத் தெரியாது…

116 இங்கு அமர்ந்து கொண்டிருக்கிற இந்த மனிதனை எனக்குத் தெரியும். அது சகோதரர் ஜேம்ஸ் என்பதை நான் நிச்சயமாக அறிவேன். அது சகோதரி ஜேம்ஸ் என்று நான் நினைக்கிறேன். சகோதரன் பென் அவர்களை நான் அறிவேன். சில நேரங்களில் உங்கள் முகங்கள் மாத்திரமே, அந்த சகோதரரும் புகைப் படங்களை எடுத்துக் கொண்டிருக்கிறார். ஆனால் அந்த…

பின்னால் எங்காவது உள்ள யாராகிலும் எங்காவது…நான்—நான்—நான் இந்த அடிப்படையில் இச்செய்தியின் முடிவில் சவால் விடுகிறேன்.

117 இந்த கடைசி நாட்களில் இது நடக்கும் என்று தேவன் வாக்களித்துள்ளார் என்று உங்களுக்குத் தெரியுமா? அவர் வாக்களித்துவிட்டார். புரிகிறதா? இப்பொழுது நான் அதை நிறைவேற்ற முடியாது. பாருங்கள், என்னால்—என்னால் அதை செய்ய முடியாது. அவர்தான் அதை செய்ய வேண்டும். அதை செய்கிறவர் அவரே, நான் அல்ல. ஆனால் நான் அவரில் விசுவாசங் கொண்டுள்ளேன். இல்லையென்றால் நான் விசுவாசிக்காத ஒன்றை உங்களிடம் கூறி இங்கு நின்று கொண்டிருக்கமாட்டேன். நீங்கள் இப்பொழுது ஜெபித்து, “கர்த்தராகிய இயேசுவே, எங்களுடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடிய பிரதான ஆசாரியராக இப்பொழுது நீர் இருக்கிறீர் என்று நான் வேதாகமத்தில் போதிக்கப்பட்டுள்ளேன்” என்று கூறுங்கள். நீங்கள் எங்கிருந்தாலும் எனக்குக் கவலையில்லை. நீங்கள், “உம்மை நான் விசுவாசிக்கிறேன். விசுவாசத்தின் மூலம் இன்றைக்கு நான் இந்த மனிதன் கூறினதை நம்புகிறேன்” என்று சொல்லுங்கள்.

118 அதைத்தான் தூதன் என்னிடம் கூறினார், “ஜனங்கள் உன்னை விசுவாசிக்கும்படி செய்” என்று கூறினார். நான் தேவனுடைய வார்த்தையை எடுத்துரைக்கும்போது, அது “என்னை விசுவாசிப்பதில்லை,” அது, “வார்த்தையை விசுவாசிப்பதாகும்”

அது வார்த்தையுடன் ஒத்துப்போகவில்லை என்றால், அப்பொழுது அதை விசுவாசிக்காதீர்கள். ஆனால் அது வார்த்தையென்று நீங்கள் விசுவாசிப்பீர்களானால், அப்பொழுது அது என்னவாயிருப்பினும், நீங்கள் ஜெபித்து விசுவாசித்து, உங்கள் இருதயத்தில் உள்ளதை அவர் எனக்கு வெளிப்படுத்துகிறாரா என்று பாருங்கள்.

119 "தேவனுடைய வார்த்தையானது இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயுமிருக்கிறது" என்று வேதம் கூறியுள்ளது என்பதை எவருமே அறிவர்.

அந்தவிதமாகத்தான் அவர் தேவன் என்று ஆபிரகாம் அறிந்து கொண்டான். அவருடைய பின்புறத்திலுள்ள கூடாரத்தில் சாராள் என்ன மனதில் நினைத்துக் கொண்டிருந்தாள் என்று அவரால் கூற முடிந்தபோது, அவர், "நான் உன்னிடத்தில் வருவேன்" என்று சொன்னபோது, சாராள் தன் இருதயத்தில் "அது அவ்வண்ணமாயிருக்க முடியாது" என்று எண்ணினாள்.

120 இப்பொழுது அவர் உங்களை குணமாக்க இங்கிருக்கிறார் என்று நான் கூறினேன். அதை குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அதை அப்படியே நீங்கள் விசுவாசித்தால் நலமாயிருக்குமே! என்னால் வேறு எதுவும் இப்பொழுது செய்ய முடியாது. எனக்கு குறிப்பிட்ட வழி எதுவுமில்லை. அதை பரலோகப்பிதா அறிந்திருக்கிறார். புரிகிறதா? நான் அதை முதலில் காண வேண்டும். நான் காண்பதைக் கூறுவேன். நிச்சயமாகவே நான் காணாததை என்னால் கூற முடியாது. அவர் மிகப் பெரிய தேவனாயிருக்கிறாரே! அவர் அப்படி செய்தால், அது உங்கள் விசுவாசத்தை வர்த்திக்குமா?

அப்படி பிரசங்கிப்பது என்னை சற்று அசைக்கிறது. ஆனால் அவர் இங்கிருக்கிறார். நான் அதைக் குறித்த உணர்வுடையவனாயிருக்கிறேன்.

121 *இங்கே* பின்னால் ஒரு மனிதன் தன்னுடைய தலையை வணங்கினபோது, அவரைக் கவனித்தேன். அவருடைய மனைவி அவருடைய பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு அவளும் ஜெபித்துக் கொண்டிருக்கிறாள். இதோ *இங்கே,* உங்கள் இருதயத்தில் ஏதோ ஒன்றுள்ளது. உங்கள் மனைவியும் ஜெபித்துக் கொண்டிருக்கிறாள். உங்கள் இருதயத்தில் ஒரு பாரம் உள்ளது. அது உங்கள் மாமியாருக்கானதாயுள்ளது. அது உண்மை. உங்கள் மாமியாருடைய கோளாறு என்னவென்று தேவனால் என்னிடம் கூற முடியுமென்று விசுவாசிக்கிறீர்களா? உங்களை எனக்கு தெரியாது. நாம் ஒருவருக்கொருவர் அந்நியர். அது உண்மையா? அவளோடுள்ள கோளாறு என்ன என்று தேவன் என்னிடம் கூற முடியுமென்று விசுவாசிக்கிறீர்களா? அவள் இங்கில்லை. நான் நீண்ட தூரத்தைக் காண்கிறேன். அவள் கிழக்கில் இருக்கிறாள். அவள் ஓஹையோவில்

வசிக்கிறாள். அது உண்மை. அவள் இரத்த அழுத்த நிலைமையினால் அவதியுற்றுக் கொண்டிருக்கிறாள். அழுது கொண்டிருக்கும் உங்கள் மனைவி அந்த உறுமாலைக் கொண்டு போய் அவள் மேல் வைக்கும்படி கூறுங்கள். சந்தேகப்படாதீர்கள். அவள் குணமடைந்து விடுவாள். அதை விசுவாசிக்கிறீர்களா?

122 இங்கு ஒரு ஸ்திரீ எனக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். அவள் அழுது கொண்டிருக்கிறாள். பிள்ளைக்கு ஏதோ கோளாறு, எனக்குத் தெரியவில்லை...இல்லை, எந்தக் கோளாறும் இல்லை. அவளுக்கு ஒரு வாஞ்சையுண்டு. அவள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற வாஞ்சித்துக் கொண்டிருக்கிறாள். அது **கர்த்தர் உரைக்கிறதாவது.** பிள்ளையே, விசுவாசி, நீ அதை பெற்றுக் கொள்ளப் போகிறாய். அது உண்மை. நீங்கள் சந்தேகப்படாதீர்கள்.

123 இங்கு ஒரு ஸ்திரீ வரிசையின் கடைசியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். அவள் ஜெபித்துக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு நான் ஒரு அந்நியன், ஆனால் அவள் நிழலிடப்பட்டிருக்கிறாள். உனக்கு அறுவை சிகிச்சைகள் நடந்துள்ளன. நாம் ஒருவருக்கொருவர் அந்நியர் என்று நான் எண்ணுகிறேன். நான் உன்னை அறியேன். நீயும் என்னை அறியாய், ஆனால் என்னை குறித்து நீ மாத்திரம் கேள்விபட்டிருக்கலாம். நீ இந்த இடத்தைச் சேர்ந்தவள் அல்ல. நீ எங்களுக்கு மத்தியில் ஒரு அந்நியராய் இருக்கிறாய். நீ விஸ்கான்ஸிலிருந்து வந்திருக்கிறாய். பட்டிணமோ மில்வாக்கி என்பதாகும். உனக்கு உள்ள கோளாறு புற்று நோய். அது மார்பில் உள்ளது. அறுவை சிகிச்சைக்கு மேல் அறுவை சிகிச்சை நடந்தும் கூட இன்னும் குணமாகவில்லை. அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தை தொட்ட அந்த விசுவாசம் உண்டாக, அதை இப்பொழுது விசுவாசி. அது உங்களுடைய இருதயத்தில் ஆழமாகப் பதியட்டும், அது நிறைவேறும். விசுவாசமுடையவளாயிரு!

124 இங்கு மூலையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் ஒரு மனிதன். அவர் தன்னுடைய தாயாருக்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறார். அவர் எனக்கு ஒரு அந்நியர். அவரை எனக்குத் தெரியாது. ஆனால் அவர் தன் தாய்க்காக ஜெபித்துக் கொண்டிருக்கிறார். இந்த ஸ்திரீக்கு உள்ள கோளாறே அவருடைய தாயாருக்கும் உள்ளது, அது புற்றுநோய். அவள் அதைக் குறித்து பயப்படுகிறாள். அது புற்று நோய்தான். ஒரு மனிதனுக்காகவும் நீர் ஜெபித்துக் கொண்டிருக்கிறீர். அவருக்கு முதுகில் கோளாறு உள்ளது. அவரும் கூட, அவர் போதையில் இருப்பதை நான் காண்கிறேன். அவர் குடிகாரர். உன்னுடைய சகோதரர். நீர் இந்த இடத்தைச் சேர்ந்தவர் அல்ல. நீர் இல்லினாயிஸிலிருந்து வருகிறீர். உம்முடைய பெயர் என்னவென்று தேவனால் என்னிடம் கூற முடியுமென்று நீர் விசுவாசிக்கிறீரா? ஃபார்மர். அது சரியா? உங்கள் கரத்தையுயர்த்துங்கள். விசுவாசியுங்கள்!

125 யாரோ ஒருவர் முழங்கால்படியிட்டு ஜெபித்துக் கொண்டிருக்கிறார். யாரோ ஒருவர் கட்டிலில் படுத்துக்கிடக்கிறார். சரி! பெண்மணியே, நீங்கள் கேட்டுள்ளது சத்தியமென்று விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசிக்கிறீர்கள். என்னால் உங்களை சுகப்படுத்த முடியுமானால், நான் வந்து சுகப்படுத்துவேன். ஆனால் நீங்கள் ஏற்கனவே இயேசு கிறிஸ்துவினால் சுகமாக்கப்பட்டுவிட்டீர்கள். நீங்கள் பாருங்கள். நீங்கள் அதை விசுவாசிக்க வேண்டும். அங்கு நின்று ஜெபித்துக் கொண்டிருக்கும் பெண்மணியே, நீங்கள் தொடப்பட வேண்டுமென்று ஜெபித்துக் கொண்டிருக்கிறீர்கள். உன்னை எனக்குத் தெரியாது, ஆனால் தேவன் உன்னை அறிவார். நீயும் கூட இப்பட்டிணத்திற்கு வெளியேயிருந்து வந்திருக்கிறாய். அது உண்மை! நீ இல்லினாயிஸை சேர்ந்தவள். அது முற்றிலும் உண்மை. இல்லினாயிஸிலுள்ள அந்த பட்டினம் கிழக்கு மோலைன் என்று அழைக்கப்படுகிறது. [அந்த சகோதரி, "அந்தப் பட்டிணத்தில் தான் நான் பிறந்தேன்" என்று கூறுகிறாள்.—ஆசி.] நீங்கள் புற்று நோயினால் அவதியுறுகிறீர்கள். நீர் ஒரு ஊழியக்காரரின் மனைவியாயிருக்கிறீர். நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? ["ஆம்."] நீ அங்கு படுக்கையிலேயே இருந்தால் மரித்துவிடுவாய். இன்றிரவு அவரை நீங்கள் ஏற்றுக் கொண்டு, "என் இருதயத்தில் நான் அவரை ஏற்றுக் கொள்கிறேன். இங்குள்ள எல்லவற்றைக் காட்டிலும் மேலான என் விசுவாசத்தை கொண்டு, நான் சுகமடைந்தேன் என்று நான் விசுவாசிக்கிறேன். நான் தேவனுடைய சமுகத்தில் இருக்கிறேன்" என்று ஏன் சொல்லக்கூடாது? படுக்கையை விட்டு எழுந்திரு. விசுவாசி. வீடு சென்று சுகமடைவாயாக. இதோ அவள்.

உங்களுடைய முழு இருதயத்தோடும் அவரை விசுவாசிக்கிறீர்களா? [சபையோர் களிகூறுகின்றனர்—ஆசி.] நாம் தேவனை ஸ்தோத்தரிப்போமாக.

126 பரலோகப் பிதாவே, உம்முடைய எல்லா நன்மைகள் மற்றும் இரக்கத்திற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். நீர் இந்த எல்லா தொல்லைகளின் மத்தியிலும் இன்னமும் இங்கு இருக்கிறீர் என்பதற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். இந்த தாறுமாறாக்கப்பட்ட உலகத்தில் இன்னமும் நீர் இங்கிருக்கிறீர். கர்த்தாவே, உம்முடைய ஆவி எப்பொழுதும் எங்களுடன் தங்கியிருப்பதாக. தேவனே, நீர் இங்கே தோலை உடுத்தினவராய் இருப்பதை நாங்கள் காண்கிறோம், நீர் மானிட இருதயங்களில் விசுவாசத்தையும், வெளிப்பாட்டையும் தரிசனத்தையும் அருளுகிறீர். நீர் உமது சபையில் தேவனாயிருக்கிறீர். உமது ஜனங்களில் தேவனாயிருக்கிறீர். கர்த்தாவே, இதற்காக உமக்கு நாங்கள் நன்றி செலுத்துகிறோம். இன்றிரவு எல்லோரும் ஒருமனப்பட்டு விசுவாசித்து சுகம் பெறுவார்களாக. இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மூலம் நான் ஜெபிக்கிறேன். ஆமென்.

127 *அந்த* பக்கத்திலுள்ள எத்தனை பேருக்கு ஜெப அட்டைகள் உள்ளன? *அந்த* பக்கத்திலுள்ளவர்கள் பின்னால் நகர்ந்து *இந்த* உட்பாதையின் நடுவில் வாருங்கள். *அந்த* உட்பாதையிலுள்ளவர்கள் *இந்த* வழியாக வாருங்கள். உங்கள் இடத்தை எடுத்துக் கொள்ளுங்கள். *இந்த* வழியாக வாருங்கள். இவர்களுக்கு ஜெபம் பண்ணி முடித்தவுடன், *அடுத்த* வரிசையிலுள்ளவர்கள் வரட்டும்.

128 மூப்பர்களே, இங்கு வாருங்கள். சகோதரர் ராய், கர்த்தர் உம்மை ஆசீர்வதிப்பாராக! நீ அங்கு உட்கார்ந்து கொண்டிருப்பதை நான் அறியவில்லை. சபையின் மூப்பர்கள், அவர்கள் இருக்கும் இடங்களிலிருந்து உடனடியாக இங்கு வர நான் விரும்புகிறேன். சிறு உதவிக்காக இங்கு வாருங்கள்.

ஜெபிக்கப்படப்போகிற ஒவ்வொருவரும் உங்கள் கரத்தையுயர்த்தி, நான் கூறுவதை அப்படியே திருப்பிப் கூற வேண்டும் என்று விரும்புகிறேன்.

கர்த்தாவே, [சபையோர், "கர்த்தாவே" என்று கூறுகின்றனர்.—ஆசி.] நான் விசுவாசிக்கிறேன். ["நான் விசுவாசிக்கிறேன்."] என் அவிசுவாசம் நீங்க உதவி செய்யும். ["என் அவிசுவாசம் நீங்க உதவி செய்யும்."] நான் விசுவாசிக்கிறேன் ["நான் விசுவாசிக்கிறேன்"] உம்முடைய பிரசன்னத்தில், ["உம்முடைய பிரசன்னத்தில்,"] நான் உம்முடைய வார்த்தையை பின்பற்றுகிறபடியால், ["நான் உம்முடைய வார்த்தையை பின்பற்றுகிறபடியால்,"] என்னுடைய… இன்றிரவு கரங்கள் என் மீது வைக்கப்பட்டுள்ளன, ["இன்றிரவு கரங்கள் என் மீது வைக்கப்பட்டுள்ளன,"] நான் என்னுடைய சுகமளித்தலை ஏற்றுக் கொள்ளப்போகிறேன், ["நான் என்னுடைய சுகமளித்தலை ஏற்றுக்கொள்ளப் போகிறேன்,"] இயேசுவின் நாமத்தில் ["இயேசுவின் நாமத்தில்."] ஆமென். ["ஆமென்."] தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

129 இப்பொழுது கவனியுங்கள். "விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும். வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்." அவர் நோவாவிடம் மழை பெய்யப் போவதாகக் கூறினார். அது ஒரு போதும்— அவர் ஒரு போதும்…"உங்களுக்கு ஜெபம் ஏறெடுக்கப்பட்டவுடனே, நீங்கள் சுகம் பெறப் போகிறீர்கள்" என்று அவர் ஒரு போதும் கூறவில்லை. அவர், "அவர்கள் சொஸ்தமாவார்கள்" என்று கூறினார்.

130 அவர் நோவாவிடம் மழை பெய்யப் போவதாகக் கூறினார். நூற்றிருபது ஆண்டுகளாக மழையே பெய்யவில்லை, ஆனால் மழை பெய்தது.

அவர் ஆபிரகாமிடம், சாராளின் மூலம் அவனுக்கு ஒரு குழந்தை பிறக்கும் என்று கூறினார். இருபத்தைந்து ஆண்டுகளாக

அது நிறைவேறவில்லை. ஆனால் அவன் குழந்தையை பெற்றுக் கொண்டான்.

அவர் ஏசாயாவிடம் ஒரு கன்னிகை கர்ப்பவதியாகப்போகிறாள் என்று கூறினார். அது எண்ணூறு ஆண்டுகளாக நிறைவேறவில்லை. ஆனால் அவள் கர்ப்பவதியானாள்.

அது சரியா? அவர் அதை வாக்குத்தத்தம் பண்ணினார். எவ்வளவு நாட்களானாலும் கவலைப்பட வேண்டியதில்லை. அவர் எப்படியும் அதை நிறைவேற்றுகிறார். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்கள்.

131 இப்பொழுது முன்னால் வாருங்கள். சகோதரர் காப்ஸ் அவர்கள் பாடலைத் துவங்கி நடத்தட்டும். நீங்கள் சுருதி கொடுப்பீர்களா? இப்பொழுது ஒவ்வொருவரும் ஜெபத்தில் இருக்கட்டும்.

132 எங்கள் பரலோகப் பிதாவே, வியாதியஸ்தர் மேல் எங்கள் கைகளை வைப்பதன் மூலம் உமது கட்டளைகளுக்கு நாங்கள் கீழ்ப்படியப் போகிறோம். கர்த்தாவே, இதற்கு மேல் நீர் செய்யக் கூடியது வேறென்னவென்று எனக்குத் தெரியாது. ஏனெனில் அவர்களுடைய சுகத்தை நீர் கிரயத்துக்கு கொண்டதாக உம்முடைய வார்த்தையில் நீர் கூறியிருக்கிறீர். இருதயத்திலுள்ள நினைவுகளை வகையறுக்கும் வார்த்தையாக எங்களுடன் இருப்பதை இன்றிரவு நீர் நிரூபித்திருக்கிறீர். எங்கள் மத்தியில் நீர் இருப்பதை நீர் நிரூபித்திருக்கிறீர். பிதாவே, தவறக் கூடாத உம்முடைய வார்த்தை ஒவ்வொரு இருதயத்துக்கும் தத்ரூபமாக அமைய வேண்டுமென்று நான் உம்மிடம் வேண்டிக் கொள்கிறேன். “இந்த மலையைப் பார்த்து ‘பெயர்ந்து போ’ என்று சொல்லி, உங்கள் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால் அது அப்படியே ஆகும்” என்று நீர் சொல்லியிருக்கிறீர். அது எப்பொழுது ஆகும் என்று நீர் கூறவில்லை.

133 பெந்தெகொஸ்தேயன்று ஜனங்களிடம் போய் காத்திருக்கும்படி கூறினீர். எத்தனை மணி நேரங்கள், எத்தனை நாட்கள் என்று நீர் ஒருபோதும் கூறவில்லை. நீர் “அது வரைக்கும்” என்று கூறினீர். இப்பொழுதும் கர்த்தாவே, இவர்கள் தங்கள் சுகத்தை ஏற்றுக்கொள்ள வந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு விடுதலை வரும் வரைக்கும் சுகம் பெறுதல் அல்லாமல் வேறெதையும் குறித்து சிந்திக்காதிருப்பார்களாக. விசுவாசிகள் என்னும் முறையில் அவர்கள் மேல் எங்கள் கரங்களை வைத்து நாங்கள் உமக்குக் கீழ்ப்படிகிறோம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில். ஆமென்.

134 சரி, இப்பொழுது முன்னால் வாருங்கள். [சகோதரன் பிரான்ஹாமும் மற்ற சகோதரர்களும் ஜனங்கள் மீது கரங்களை வைத்து, ஜெபவரிசையில் உள்ள ஒவ்வொருவருக்காகவும் ஜெபிக்கிறார்கள். ஒலி நாடாவில் காலி இடம்.—ஆசி.] நீங்கள் சுகமடைந்து விட்டீர்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

தொடர்ந்து முன்னோக்கி செல்லுங்கள். அது நல்லது!...?...[ஒலி நாடாவில் காலி இடம்—ஆசி.]

...யாவும் கைகூடிடும், நம்பிடுவாய்;
நம்பிடுவாய், நம்பிடுவாய்,
யாவும்...

கர்த்தராகிய இயேசுவே, நான் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்தில் இப்பொழுது இந்த கைக்குட்டைகளுக்காக ஜெபிக்கிறேன். ஆமென்.

அந்த வார்த்தைகளை நாம் மாற்றிப்பாடுவோமானால் நலமாயிருக்கும் என்று நினைக்கிறேன்:

இப்பொழுது நான் விசுவாசிக்கிறேன்,
இப்பொழுது நான் விசுவாசிக்கிறேன்,
யாவும் கைகூடிடும், இப்பொழுது நான் விசுவாசிக்கிறேன்:
இப்பொழுது நான் விசுவாசிக்கிறேன்,
இப்பொழுது நான் விசுவாசிக்கிறேன்,
யாவும் கைகூடிடும், இப்பொழுது நான் விசுவாசிக்கிறேன்,

135 நீங்கள் கேட்டுக் கொண்டதும் வாஞ்சித்ததும் அருளப்படும் என்று விசுவாசிக்கிறீர்களா? [சபையோர், "ஆமென்" என்கின்றனர்.—ஆசி.] அது நிச்சயம் நடக்கும்.

136 சில நிமிடங்களுக்கு முன்பு, சிக்காகோவிலிருந்து வந்துள்ள என்னுடைய இத்தாலிய நண்பர்களில் சிலரை நான் கண்டேன். எத்தனை பேருக்கு சிக்காகோவைச் சேர்ந்த சகோதரி போடோஸி அவர்களைத் தெரியும்? பாருங்கள், உங்களுக்குத் தெரியும், அண்மையில் அவளுக்கு மனநிலை கோளாறு ஏற்பட்டு, அது மிக, மிக மோசமடைந்துவிட்டது. ஆனால் அந்தக் காலை சிக்காகோவில் நடந்த கிறிஸ்தவ வர்த்தகப் புருஷருடைய காலை சிற்றுண்டிக் கூட்டத்தின் போது, பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் நான் அந்த சகோதரியிடம் கூறினேன். அவள் ஒரு பக்கம் வந்தபோது, அவளால் துயரத்தை அடக்கிக் கொள்ள முடியவில்லை. நான், "சகோதரியே, அது உடனடியாக சுகமாகாது, ஆனால் நீங்கள் சுகமடையப் போகிறீர்கள்," என்றேன். மேலும் நான், "பதினெட்டு மாதங்கள் அல்லது இரண்டு ஆண்டுகளுக்குள் நீர் சுகமடைந்து விடுவீர். அந்த காலவரம்பிற்குள் நீங்கள் சுகமடைவீர்கள்" என்றேன்.

137 அன்றொரு நாள் அவளுடன் நான் பேசிக் கொண்டிருந்த போது அவள் மிக மகிழ்ச்சியாய் சாட்சி கூறுவதை நான் கேட்டேன். அவளுடைய வாழ்க்கையிலே அதுவே மிகவும் மகிழ்ச்சியான தருணமாயிருந்தது. அவள் காரில் போய்க் கொண்டிருந்தாள். அவளுக்கு சமாதானமே இல்லை. தேவனுடைய பிரசன்னம் அவளை விட்டு விலகிவிட்டிருந்ததுபோல் தென்பட்டது. உண்மையாகவே

அது மனநிலை கோளாறாயிருந்தது என்று உங்களுக்குத் தெரியும். திடீரென்று அது பெரும் மகிழ்ச்சி பொங்கத் திரும்பி வந்தது, பரிசுத்த ஆவியின் வல்லமை அவள் மேல் இறங்கினது. அவள் அழுதாள், அவள் கதறினாள், அவள்—அவள்...அவர்கள் ஒரு மகிழ்ச்சியான தருணத்தை அனுபவித்தனர், கிட்டத்தட்ட மூன்று அல்லது நான்கு வாரங்களுக்கு முன்பு, இல்லை ஒரு மாதத்துக்கு முன்பு. கடந்த, ஞாயிற்று கிழமைக்கு முந்தின ஞாயிறு அவள் சாட்சி பகர்ந்ததை நான் கேட்டேன். அவள், “சகோதரன் பிரான்ஹாமே, நான் வீடு திரும்பினபோது, அந்த ஒலிநாடாவை போட்டுக் கேட்டேன். அது சரியாக பதினெட்டு மாதங்களுக்கு முன்பாயிருந்த அந்த நாளாகும்” என்றாள். ஆமென்.

நீங்கள் அவரை நேசிக்கிறீர்களா? [சபையோர், “ஆமென்” என்கின்றனர்—ஆசி.] அவர் அற்புதமானவர் அல்லவா? [“ஆமென்.”]

138 இப்பொழுது, இத்தனை ஆண்டுகளாக ஒரு முறைகூட தவறாமல் அவருடைய வார்த்தையின் மூலம் சரியாக முன்னுரைத்து வந்துள்ள அதே பரிசுத்த ஆவி, இன்றைக்கு உங்களுக்கு, தேவன் எங்கோ தூரத்தில் உள்ள ஒருவராகவோ அல்லது சரித்திரசம்பந்தமான ஒருவராகவே அல்லாமல் தம்முடைய வார்த்தையின் மூலமாகவே வெளிப்படுத்த முயற்சித்துள்ளார். அவர் இன்றைக்கு நிகழ்காலத்தில் ஜீவிக்கிறவராய் தமது வார்த்தையை வெளிப்படுத்தினார். அவர் தம்மை தம்முடைய சபையில் மனித திரையில் மறைத்துக் கொண்டு, உங்கள் விசுவாசமும் என் விசுவாசம் ஒன்று சேர்ந்து தேவனுடைய ஒரே பிரிவாகும் போது, அவர் தம்மை வெளிப்படுத்துகிறார். உங்களையல்லாமல் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. என்னாலேயல்லாமல் உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. நாம் தேவனில்லாமல் எந்த ஒரு காரியத்தையும் செய்ய முடியாது. எனவே அது ஒன்று சேர்ந்த பிரிவாகிறபோது, அது இணைப்பாகிறது. தேவன் அந்த நோக்கத்துக்காகவே என்னை அனுப்பினார். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்கள். அது நடக்கிறது. அது அப்படித்தான் என்று முற்றிலுமாக உறுதிபடுத்தப்படுகிறது. பாருங்கள்.

உங்களோடுள்ள கோளாறு என்னவாயிருந்தாலும், யார் என்ன கூறியிருந்தாலும், எனக்குக் கவலையில்லை. நீங்கள் சுகமடையப்போகிறீர்கள் என்று உங்கள் இருதயத்தில் விசுவாசிப்பீர்களானால், எதுவுமே அதை எப்போதுமே நிறுத்த முடியாது. அவர் அவ்வண்ணமாகக் கூறினார். அவர், “வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ தவறிப்போகாது” என்று கூறியுள்ளார். அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? [சபையோர், “ஆமென்” என்கின்றனர்.—ஆசி.]

139 நான் செல்லவிருக்கும் மற்ற கூட்டங்களுக்காக எனக்காக எத்தனை பேர் ஜெபிப்பீர்கள்? [சபையோர், “ஆமென்” என்கின்றனர்.—ஆசி.] ஜெபம் தேவைப்படுகிற ஒருவன் நான் தான்.

புரிகிறதா? உங்களைத் தவிர மற்றெல்லாரும் என்னைப் புறக்கணித்து விட்டார்கள், இருப்பினும் அங்கு வித்து உள்ளது.

140 நான் தென் ஆப்பிரிக்காவுக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். நான் ஒவ்வொருவரையும் மூன்று முறை; அதாவது ஒருமுறை பிதாவுக்காக, ஒருமுறை குமாரனுக்காக, ஒருமுறை பரிசுத்த ஆவிக்காக முகங்குப்புற தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் கொடுப்பேன் என்று ஒரு தாளில் கையொப்பமிட்டுக் கொடுத்தாலொழிய அவர்கள் என்னை அனுமதிக்கமாட்டார்களாம். மற்ற பக்கத்தில், பிதாவுக்காக ஒருமுறை நான் பின்னால் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டுமாம்...அந்த உபதேசத்தை போதிப்பேன் என்றும் கையொப்பமிடவேண்டுமாம்.

நான் அவர்களுக்கு இவ்வறு பதில் எழுதினேன். நான், “கடந்த சில ஆண்டுகளாக பரிசுத்த ஆவியானவர் என்னை ஆப்பிரிக்காவுக்கு கொண்டு செல்ல முயன்று வருகிறார். ஒரு பிற்பகல் வேளையில் முப்பதாயிரம் பேர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட அந்த இடத்தில் அவர் என் ஊழியத்தை உபயோகிக்க விரும்புகிறார்” என்று கூறி எழுதினேன். மேலும் நான், “அந்த ஆத்துமாக்களின் இரத்தப்பழி உங்கள் மேல் இருக்கும், என் மேல் அல்ல என்பதை நினைவு கூருங்கள். நான் வர ஏற்பாடு செய்துவிட்டேன் என்று கூறினேன். ஆனால் நீங்களோ அதை மறுக்கிறீர்கள்” என்று கூறினேன்.

தேவனுடைய குமாரனாகிய இயேசு சபையை விட்டு துரத்தப்பட்டு, வார்த்தை புறக்கணிக்கப்பட்டிருக்கிற இந்நாளில் அது வேறு என்னவாயிருக்கும் என்று வியப்புறுகிறேன். ஆனால் இவையெல்லாவற்றிலும், அவர் இன்னும் தம்மை தமது மக்களுக்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். அதற்காக நீங்கள் நன்றியுள்ளவர்களாயிருக்கிறீர்களல்லவா? [சபையோர், “ஆமென்” என்று கூறுகின்றனர்.—ஆசி.]

141 இன்றிரவு நான் கடந்து சென்று, அவர்கள் மேல் என் கைகளை வைத்தேன். அவர்களில் சிலர் வயது சென்ற ஸ்திரீகள், சிலர் வாலிபர்கள், சிலர் வயோதிபர்கள். சிலர் வாலிபர்கள், வயோதிக மனிதர்கள், நானோ மிகவும் வியர்த்து நனைந்து போனேன். “இங்கு உட்கார்ந்து கொண்டு வார்த்தையைக் கேட்டு கொண்டிருப்பதை ஏனைய உலகம் பைத்தியக்காரத்தனம் என்று நினைக்கும்” என்று நான் எண்ணினேன். புரிகிறதா? அவர்கள்—அவர்கள் திருகுமறையாயிருக்கிறார்கள். பாருங்கள், தேவன் அதற்கு மறைபோட்டு உங்களை வியாதியிலிருந்து வெளியே இழுத்துக்கொள்ள இங்கிருக்கிறார். அது வார்த்தையின் வாக்குத்தத்தமாயுள்ளது. நினைவிருக்கட்டும், இது இறுக்கமாகத் தொடங்கும், “அவர்களை நான் இழுத்துக் கொள்ளுவேன். நான் உயர்த்தப்பட்ட பின்பு இழுத்துக்கொள்ளுவேன்.” அவர் உங்களிலிருந்து அதை வெளியே இழுப்பார். அவர் நிச்சயம் செய்வார். நீங்கள் அவரை விசுவாசிக்க மாத்திரம் செய்யுங்கள்,

அவரில் விசுவாசமாயிருங்கள். அவரை சந்தேகப்படாதீர்கள். அவரை விசுவாசியுங்கள்.

142 எனக்காக ஜெபியுங்கள். வேறு யாருக்கும் நீங்கள் ஜெபம்பண்ண அவசியமில்லாதிருக்கும் வேளையில், என்னை நினைவு கூருங்கள்.

அதன்பின்னர் நாம் சந்திக்கும் வரைக்கும்! நாம்
சந்திக்கும் வரைக்கும்!

நாம் சந்திக்கும் வரை…

நீண்ட தூரம் பயணம் செய்து வந்ததற்காக நன்றி. நீங்கள் வீடு திரும்பும்போது தேவன் உங்களைப் பாதுகாப்பாராக!

நாம்…வரை

எல்லா கிறிஸ்தவர்களையும் வாழ்த்துங்கள், அவர்களை வாழ்த்துங்கள், இங்குள்ள கூட்டத்தினர் வாழ்த்தினதாக கூறுங்கள். தேவனுடைய சமாதானம் உங்கள் மேல் தங்கியிருப்பதாக; ஷாலோம்!

நாம் சந்திக்கும் வரைக்கும் தேவன் உங்களோடு
கூட இருப்பாராக!

[சகோதரர் பிரான்ஹாம் *தேவன் உங்களோடு இருப்பாராக* என்னும் பாடலை வாய்திறவாமல் மௌனமாக பாடத் துவங்குகிறார்—ஆசி.]

…நாம் சந்திக்கும் வரை!
…இயேசுவின் பாதத்தில்;
நாம் சந்திக்கும் வரைக்கும்! நாம் சந்திக்கும்
வரைக்கும்!
நாம் சந்திக்கும் வரைக்கும் தேவன் உங்களோடு
கூட இருப்பாராக!

143 எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. நீங்கள் பாருங்கள், அங்குள்ள சில, எத்தனையோ காரியங்கள் எனக்குத் தெரியாது, ஆனால் நான் அறிந்துள்ள சில காரியங்கள் உண்டு. உங்களுக்காக நான் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். உங்களுடன் நான் தொடர்பு கொண்டுள்ளதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. உங்களில் ஒருவனாக இருப்பதைக் குறித்து நான் மகிழ்வுறுகிறேன். தேவன் உங்களோடு இருப்பாராக. அவர் நிச்சயம் இருப்பார். அவர் உங்களை விட்டு ஒருபோதும் விலகமாட்டார். அவர் உங்களை ஒருபோதும் கைவிடமாட்டார். அவர் உங்களை விட்டு விலக மாட்டார். நீங்கள் இப்பொழுது திரையினூடாகக் கடந்து வந்து விட்டீர்கள். புரிகிறதா?

144 ஜார்ஜியாவை சேர்ந்த நமது கூட்டாளி போதகர்களில் ஒருவரான சகோதரர் பாமரை இன்றிரவு காண்பதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. சகோதரர் ஜீனியர் ஜாக்சன் இக்கட்டிடத்தில் எங்கோ இருக்கிறார், பின்னால் மூலையில் இருக்கிறார். நாங்கள் அவரை வரவேற்க மகிழ்ச்சி அடைகிறோம். சகோதரர் டான் ரடல் இங்கு

உட்கார்ந்து கொண்டிருக்கிறார். ஓ, எத்தனையோ பேர்! எனக்குத் தெரியவில்லை. நான் யாரையாகிலும் காணத்தவறினால்...சகோதரர் பென் ப்ரையண்ட் இங்கிருக்கிறார். இன்னும் அநேகர் இங்குள்ளனர். அருமை சகோதரர் வில்லார்ட் காலின்ஸ். நீங்கள் எல்லாரும் இங்கு வந்திருப்பதில் எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி.

இப்பொழுது நாம் சிறிது நேரம் எழுந்து நிற்கும்படி நான் எதிர்பார்க்கிறேன். இப்பொழுது நாம் நம்முடைய தலைகளை வணங்குவோமாக.

நாம் சந்திக்கும் வரைக்கும்!
நாம் சந்திக்கும் வரை இயேசுவின் பாதத்தில்; நாம் சந்திக்கும் வரை!
...நாம் சந்திக்கும் வரை!
நாம் சந்திக்கும் வரைக்கும் தேவன் உங்களோடுகூட இருப்பராக.

145 நீங்கள் ஆவியினால் உண்டான அந்த ஐக்கியத்தின் அருகாமையை உணருகிறீர்களா?

நாம் வாய்திறவாமல் மௌனமாக அதைப் பாடுவோம். [சகோதரன் பிரான்ஹாமும் சபையோரும் *தேவன் உங்களோடிருப்பாராக* என்னும் பாடலை மௌனமாக வாய்திறவாமல் பாடத் துவங்குகின்றனர்.—ஆசி.]

ஒஹையோவைச் சேர்ந்த சகோதரர் மிக்கின்னி நம்முடன் இருப்பதை நான் கவனித்தேன். சகோதரர் ஜான் மார்டினும் அவருடைய சகோதரனும். நீங்கள் எல்லோரும் வந்திருப்பதில் மிக்க மகிழ்ச்சி. சகோதரர்களே, நான் ஒருக்கால் உங்களைக் காணத் தவறலாம். ஆனால் அவர் உங்களை அறிந்திருக்கிறார்.

நாம் சந்திக்கும் வரைக்கும்! என் இருதயமும் உங்கள் இருதயங்களும், நாம் தேவனை சந்திக்கும் வரைக்கும் தேவனுடைய இருதயத்துடன் ஒன்றாயிருப்பதாக! [சகோதரன் பிரான்ஹாமும் சபையோரும் *தேவன் உங்களோடிருப்பாராக* என்று தொடர்ந்து வாய்திறவாமல் மௌனமாக பாடுகின்றனர்—ஆசி.]

(நான் கலைந்து செல்லும்படி அனுப்பி வைக்க யாரையாவது கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்...?...)

நாம் ஜெபத்திற்காக இப்பொழுது தலைவணங்கியிருக்கையில்.

146 அவர்கள் இங்கு வந்திருப்பதற்காக நமக்கு மகிழ்ச்சி என்று ஒவ்வொரு போதகருக்கும் தெரியப்படுத்துங்கள். சபையார் அனைவரும், டென்னஸி, ஒஹையோ மற்றும் தேசம் முழுவதிலுமுள்ள ஜனங்களாகிய நீங்கள் போஸ்டனிலிருந்து வழி நெடுகவந்துள்ள சில ஸ்திரீகளை இன்று நான் சந்தித்தேன். அங்கிருந்து வந்துள்ள கறுப்பு சகோதரகளும் கூட இன்று காலை இங்கிருந்தனர். நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்து எத்தனையோ

பேர். விசுவாசமுள்ள என் அருமையான சிநேகிதனே, உனக்கு நன்றி. தேவன் உன்னோடு இருப்பாராக. உன்னை என் சிநேகிதன் என்று நான் அழைக்கிறேன். அதைக் குறித்து இயேசு என்ன கூறினார் என்று ஞாபகம் உள்ளதா? சிநேகிதன் என்பவன் “சகோதரனைக் காட்டிலும் நெருங்கியவன்”, ஆம். நாம் இப்பொழுது தலைவணங்கியிருக்கும்போது…இன்னும் சில நாட்களில் நாம் மறுபடியும் சந்திக்கும் வரைக்கும், தேவன் உங்களோடு கூட இருப்பாராக.

147 நம்முடைய நல்ல விசுவாசமுள்ள சகோதரன், சகோதரன் ரிச்சர்ட் ப்ளேர் அவர்களை ஜெபம் செய்து கூட்டத்தை அனுப்பிவிடும்படி நான் கேட்டுக் கொள்ளப்போகிறேன். சகோதரர் ப்ளேர்.